University of Madras.

TAMIL TEXT FOR INTERMEDIATE EXAMINATION 1914 & 15.

Part—II.

PANNUL THIRATTU (IKAI)

Containing Introduction, Critical Notes, Clear Commentaries &c.,

INDISPENSABLE TO ALL LOVERS OF TAMIL.

BY

M. Gopalakrishnier,

Tamil Pandit, Madura College &c.,

ஸ்ரீமான்-பாண்டித்துரைத் தேவரவர்களது

பன்னூற்றிரட்டு-ஈகை-மூலமும்,

மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவானும்,

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் அக்ராஸநாதிபதியும்,

வித்யாபாநுப் பத்திராதிபரும்,

மதுரைக்காலேஜ் தமிழ்ப்பண்டிதருமான,

ஸ்ரீமத்-ம, கோபாலகிருஷ்ணையர்

இயற்றிய உரையும்.

PUBLISHER:

E. M. GOPALAKRISHNA KONE,

Book-Seller, Pudumantapam, Madura.

TAMIL SANGAM POWER PRESS, MADURA.

Price As. 8.] 1914 [விலை அணா—8.

OFFICE OF THE REGISTRAR ... 19 FEB 1914 ... MADRAS.

3

முகவுரை.

"தெளிவாகிய ஒளியேநனி திகழ்மாமணித் திரள்கள்
அளவா இருள் கடலாழ் குகை யதிலே மறைந்துளபோல்"

தமிழ்க் கடலுள்ளும், பல்வேறு நூல்களியற்றிய பாவலரின் அருங் கருத்துக்களாகிய மணிகள் ஆங்காங்கிருத்தலை அறிஞர் அறிவர். இத்தகைய கருத்துக்களை ஓரிடத்தில் ஒருசேர அறிந்து மகிழ்தற்கு அநுகூலமாக ஸ்ரீமாந்-பாண்டித்துரைத் தேவர்களால் இப் "பன்னூற்றிரட்டு" தொகுக்கப்பெற்று 1898-௵ வெளிவந்ததாகும். அடிக்கடி சர்வகலாசாலையரால் இதிலிருந்து பரீக்ஷாபாடம் குறிக்கப்படுவதே இதன் உபயோகத்தையும் பெருமையையும் நன்கு விளக்கும். 1, 33, 961 செய்யுட்கள் கொண்ட 104-அரிய நூல்களினின்றும் தொகுத்த 2132 செய்யுட்கள் கொண்டு 54-அதிகாரங்களால் இலகும் இந் நூலின் 16-ஆவது அதிகாரமாகிய "ஈகை" 1914, 1915 ௵ இன்டர் மீடியேட் வகுப்புப் பாடபுத்தகங்களில் ஒன்றாகத் தெரிந்தெடுக்கப்பட்டுளது. சர்வகலாசாலையர் இப் பரீக்ஷைக்கு இதில் 45 செய்யுட்கள் எனக் குறித்துளர். எந்த 45 செய்யுட்கள் என்பது விளங்கவில்லை; 1906 ௵ வெளிவந்துள்ள 2-ஆவது பதிப்பில் 63 செய்யுட்கள் உள்ளன; ஆயினும் முதற் பதிப்பில் 45 செய்யுட்களே இருத்தலின் அவற்றையே அவர்கள் எண்ணினர் போலும். அச் செய்யுட்களுடன் அதிகமாகச் சேர்க்கப் பெற்ற 18 செய்யுட்களும் மூலத்தில் (*) இவ் வுடுக்குறியால் விளக்கப்பட்டுள்ளன. பழைய பதிப்பிற் காணப்படும் பாட்டுக்களையே சர்வகலாசாலையர் கருதினர் என்று துணியவல்லேன் அல்லேன். கலாசாலை அதிகாரிகள் மூலமாகச் சர்வ கலாசாலையரிடமிருந்து மாணவர்கள் உண்மை அறிவார்களாக. 63 செய்யுட்களையும் கற்றல் அறிவு வளர்ச்சிக்கும் விஷய உணர்ச்சிக்கும் அநுகூலமாதலின், முழுதுங் கற்றலே முதுக்குறைவாகும். நிற்க.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 FEB 1914
MADRAS.

இவ் 63 செய்யுட்களையும் தம் சொந்தப் பதிப்பாகிய பன்னூற்றிரட்டினின்றும் பதிப்பித்துக்கொள்ள எனக்கு அனுமதி அளித்த மதுரைத்தமிழ்ச் சங்கத்தார்க்கும், அற்பக் கல்வியும் சிற்றறிவுமுடைய என்னை, மிக்க கல்விமான்கள் செய்யவேண்டிய "உரையெழுத"லாகிய பெருங்காரியத்தைச் செய்ய ஆக்ஞாபித்த சில கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்களுக்கும், உரை எழுதுகையில் எனக்காங்கு நிகழ்ந்த சிற்சில ஐயப்பாடுகளைத் தெளிவித்துதவிய எமது நண்பர் மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ப்ரும்மஸ்ரீ B. B. சுப்பராமையரவர்களுக்கும், "செந்தமிழ்" ஆசிரியர்: ப்ரும்மஸ்ரீ-திரு. நாராயணையங்கார் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். இரண்டே வாரங்களில் மூலத்தையும், யான் எழுதிய உரையையும் அச்சிட்டுதவிய மதுரைத் தமிழ்ச்சங்க மானேஜர் ஸ்ரீ T. A. சுப்பவேங்கடராமையரவர்களின் அன்பும் பாராட்டற்பாலதே.

ஆங்காங்கு சொல்லிய இலக்கண இலக்கியக் குறிப்புக்களைக் கொண்டு சொல்லாது ஒழிந்தவற்றையும் உய்த்துணர்க.

பெரும்பாலும் எனது அற்ப அறிவைக்கொண்டே இவ்வுரை எழுதப்பட்டதாதலாலும் அதிசீக்கிரத்தில் இந்நூல் வெளியாக்கப்பட்டதாலும், பிழைகள் இதிற் காணப்படின், அவற்றை நீக்கி என்னை மன்னிக்க அறிஞர்களை வேண்டுகின்றேன்.

மதுரை,
1—2—14.

இங்ஙனம்,
ம. கோபாலகிருஷ்ணன்.

அநுபந்தம்:— 2-ஆவது செய்யுளில் "ஈந்த" என்பதற்கு "ஈயப்பெற்ற," "கொடுத்த" [illegible] இரு பொருளுங்கொண்டு "அண்ணல் ..... இருவரும்" என்பதற்கு "ஈவோனை [illegible]ற்போனும், [illegible]போனை ஈவோனும், "கடவுள்" என நினைந்து கைகூப்பி வணங்கவேண்டும். அவ்வாறு செய்யாத இருவரும்" எனப் பொருள் கொள்ளல் இனிது பொருந்தும்.

13-ஆவ[illegible]டில், "மனைகடோறும் .... கபாலி":—அன்னதானம் ஜீவப்பிரீதி மட்டுமேயன்றி ஈசுவரனுக்கும் பிரீதி என்பதை அவரே இரந்து காட்டி அதனைத் தரச்செய்த உண்மையை விளக்கும். இரப்போர் தெய்வரூபம் என்பதையும், தெய்வமே மாறுருக்கொண்டு வரக்கூடும் என்பதையும் இது அறிவுறுத்தும்.

938

5

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 FEB 1914
MADRAS.

பன்னூற்றிரட்டு.

இந் நூல் தொகுத்தோர் வரலாறு:

"உக்கிரபாண்டியன்" என்னும் ஒரு பெயர் பெற்றவரும், பாலவனத்தம் ஜமீந்தாராக இருந்தவரும் ஆகிய ஸ்ரீமான்-பாண்டித்துரைத் தேவரவர்கள், அருங்கலை விநோதரும், தமிழ் வித்வான்களை ஆதரித்தவரும், ராமநாதபுரம் ஜமீன் நிர்வாகராக இருந்தவருமான ஸ்ரீமான்-பொன்னுசாமித்தேவரின் மூன்றாவது குமாரர். இற்றைக்கு 47-வருஷங்கட்கு முன் புகழொடு தோன்றியவர்; "மகன் அறிவு, தந்தையறிவு," "பிதுச் சதகுணம் புத்ர:" முதலிய முதுமொழிகளுக்கு இலக்காகியும், "திருவேறு, தெள்ளியராதலும் வேறு" என்பதற்கு விலக்காகியும் விளங்கிய இருபெருஞ் செல்வத்தொரு பெருங்குணத்தர். மறைகள் சிந்தனை சைவசிந்தனை பொரு மனத்தர். 1901-ஞு மேமீ கூடிய சென்னை மாகாணக் கூட்டம்கூடப் பேருதவிபுரிந்து, அதன் வரவேற்புச் சபையின் தலைவராகிய வள்ளலார். அம் மாதம் 24-உயன்று நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவி நல்லிசை பெற்ற புண்ணிய ஜீவகாருண்ணியர். இவ் விஜயாவிநோதர்,

* "நற்றமிழ்ச்சை [illegible] யற்றவர்கள் கற்றவர்கள் நலிந்துவாடச்
செற்றமறு நித்திய பொற்புறுநற் கற்புடையோர் இனைகத் திரங்கச்
சுற்றமுநட் புற்றவரும் பற்றலரும் மற்றெவரும் சோகஞ் சூழக்
குற்றமறு பெற்றியுறு கொற்றவ!என் குற்றனைநீ கூறாய்! கூறாய்!!"

* அரும்பொருட்டிரட்டு.

என்று பலரும் துக்கிக்க, விரோதிகிருது ௵ கார்த்திகைமீ 17௳ இகம் நீங்கிப் பரம் சென்றனர். இவரது பொருளுதவியால் வெளிவந்த நூல்கள்:—மஹாமஹோபாத்யாய ப்ரும்மஸ்ரீ-வே. சாமிநாதையரவர்கள் தமது அரிய உரையுடன் வெளிப்படுத்தியுள்ள மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலையும், சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, திருவிளையாடல் உரை முதலியனவும் ஆகும். அவர் தாமே இயற்றியவை, சிவஞான சுவாமிகள் இரட்டைமணி மாலை, ராஜராஜேசுவரி பதிகம், சுப்பிரமணியர் காவடிச்சிந்து முதலியனவும் சில தனிப்பாடல்களும் ஆம். இவர் தொகுத்துள்ள நூல்கள் பன்னூற்றிரட்டு, சைவமஞ்சரி, நீதிமஞ்சரி முதலியன. (இவை யாவும் என்னிடத்தில் கிடைக்கும்.) இவரது ஜீவிய சரித்திரத்தை விரிவாக அறிய விரும்புவோர் எனது "அநும்போநட்டிநட்"டினின்றும் அறிக.

சைவ விஷயமாய் வெளிவந்துள்ள நூல்களையும் அவற்றை இயற்றியோரையும் பற்றிய குறிப்புக்கள்.

திருமந்திரம் :— சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கினையும் விரித்துக்கூறும் இந்நூல் 3000-செய்யுட்கள் கொண்டது. இதனை இயற்றியோர் திருமூலநாயனார் என்பவர். இவரது இயற்பெயர் சிவயோகியார். அகஸ்தியரைக் காண இவர் தெற்கு நோக்கி வருகையில், "ஆவடுதுறை"யில் மூலன் என்னும் இடையன் இறந்து கிடந்ததையும், அவனது பிரிவாற்றாது அவன் மேய்த்த பசுக்கள் அவன் பிரேதத்தைச் சூழ்ந்து கதறினதையும் கண்டு, இரங்கி, அவனுடலிற் பிரவேசித்து, பசுக்கள் மகிழ அவற்றை மேய்த்து, பின்வந்து தம் சரீரத்தைத் தேடிப்பார்த்தனராம். அதனைப் போட்ட இடத்தில் காணாமையின் அம்மூலனது சரீரத்தோடேயே இருந்து "திருமூலன்" என்னப் பட்டனர் என்பர். இவரது திருமந்திரம் சைவமுறைகளில் 10-ஆவதாகக் கொள்ளப்பட்டுளது.

கந்தபுராணம்:—சுப்பிரமணியக் கடவுளைப்பற்றிய இப்புராணம் வடமொழியில் ஸ்ரீவேதவியாசர் இயற்றியது. இதனைத் தமிழ்மொழியிற் பாடியோர் கச்சியப்ப சிவாசாரியாரும், அவரது மாணவர் கோனேரியப்ப முதலியாரும் ஆவர். முதல் 6 காண்டம் முன்னையோராலும், உபதேச காண்டம் மட்டும் பின்னையோராலும் பாடப்பட்டவை. கச்சியப்ப சிவாசாரியார் காஞ்சிபுரத்தில் ஆதிசைவர் குலத்தில் சுமார் 1500 வருஷங்களுக்கு முன் உதித்தவர். சுப்பிரமண்யபக்தியிற் சிறந்த இவர் அக்கடவுளின் கட்டளைக்கிணங்க இப்புராணம் பாடியருளியவராம்.

FEB 1914 MADRAS.

காஞ்சிப்புராணம்:—இதன் முதற்காண்டம் சிவஞான முனிவராலும் இரண்டாம் காண்டம் இவரது மாணாக்கர் கச்சியப்ப முனிவராலும் இயற்றப்பட்டவை. சிவஞானமுனிவர் இற்றைக்கு ஏறக்குறைய 125 வருஷங்கட்கு முன் அம்பாசமுத்திரத்திற்கடுத்த விக்ரமசிங்கபுரத்தில் முக்களாலிங்கர் என்ற இயற்பெயரோடு தோன்றியவர். வேளாள குலத்திற் பிறந்த இவரது மதம் சைவம். துறவறம்பூண்ட இத்தூயர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் சில:—தொல்காப்பிய சூத்திர விருத்தி, திராவிட மகாபாஷ்யம், சிவஞானபோதச் சிற்றுரை, தர்க்கசங்கிரக அன்னம்பட்டீய மொழிபெயர்ப்பு, சோமேசர் முதுமொழிவெண்பா, இலக்கண விளக்கச் சூறாவளி.

தணிகைப்புராணம்:— தணிகாசல மகிமையைக்கூறும் இந்நூல் கற்பனையலங்காரங்களிலும் நடையழகிலும் அதி சிறந்தது. இதனை இயற்றியவர் கச்சியப்பமுனிவர். சிவஞான முனிவரது மாணாக்கராகிய இவர் திருத்தணிகையில் சைவ வேளாள குலத்தில் ஏறக்குறைய 120 வருஷத்திற்கு முன் தோன்றியவர். விநாயகபுராணம் திருவானைக்காப்புராணம், திருப்போரூர்ப் புராணம் முதலிய பல நூல்கள் பாடிப் புகழுற்றவர். விசாகப்பெருமாளையர் தந்தையாகிய கந்தப்பையரின் நல்லாசிரியர்.

திருக்கூவப்புராணம்:—'திருவிற்கோலம்' என்று புகழ்ந்து கூறப்படும் சிவஸ்தல மகிமையைக் கூறுவது இது. இதனைப்பாடியவர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் காஞ்சிபுரத்தில் சுமார் 290 வருஷங்களுக்கு முன் விளங்கிய வீரசைவர். இவர் இயற்றிய நூல்கள் அநந்தம்; அவற்றுள் சில:—திருச்செந்தூர் நிரோட்டகயமக அந்தாதி, தர்க்கபரிபாஷை, நால்வர் நான்மணிமாலை, வேதாந்த சூடாமணி, ஏகமத நிராகரணம், நன்னெறி, வெங்கைக்கோவை, பிரபுலிங்கலீலை, சோணசைலமாலை. துறவியாகிய இவர் 32-வது வயதில் சிவபிரான் திருவடி நீழலை அடைந்தனர்.

காசி கண்டம்:—காசி க்ஷேத்திர மகிமையைக் கூறும் இந்நூல் தமிழில் அதிவீரராம பாண்டியன் இயற்றியதாகும். தமையனுக்கடங்காது சகவாச தோஷத்தாற் சீர்குலைந்த இவர், தம் அண்ணியாராகிய மதனலீலையார் என்பவரால் நல்வழிப்படுத்தப் பெற்று இந்நூலையும் பிறநூல்களையும் பாடினர் என்பர். நைடதம், கூர்மபுராணம், நறுந்தொகை யென்னும் "வெற்றிவேற்கை", திருக்கருவை யந்தாதி முதலியன இவர்பாடிய பிறநூல்களாம். 'கொற்கை' என்று பெயர் வழங்கும் தென்காசியில் இவர் சுமார் 300 வருஷங்களுக்குமுன் அரசுபுரிந்தவரெனத் தெரிகிறது.

பகவற் கீதை:— ஸ்ரீ கிருஷ்ணன் குருக்ஷேத்திர யுத்த காலத்தில் அர்ச்சுணனுக்கு உபதேசித்த விஷயங்களடங்கிய ஞான நூலாகும் இது.

பலாபேக்ஷையின்றி கர்மங்களைச் செய்துகொண்டிருக்கவேண்டுமென்றும், அவ்வாறு செய்பவன் ஞானியே ஆவன் என்றும் இது நன்கு கற்பிக்கும். இவ்வுபதேச நூலை நேரிற் கேட்டு வெளியிட்டவர் சஞ்சயர். பரமாசாரியர்களாகிய ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ இராமாநுஜர், ஸ்ரீ மத்வர், இதற்கு முறையே அத்வைத, விசிஷ்டாத்வைத, த்வைத பரமாக பாஷ்யம் செய்திருக்கின்றனர். உலகத்தில் நாகரிக மிக்க ஜனங்கள் பேசும் பல பாஷைகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுப் போற்றப்பட்டு வருவதே அதன் பெருமைக்குப் பெருஞ்சான்றாகும். வடமொழியை முதல் நூலாகக் கொண்டு ஸ்ரீபட்டனார் தமிழிற் பாடியது இது. இவர் சமீப காலத்தவர் என்பதுமட்டும் தெரிய வருகிறது. இவரைப்பற்றியஏதும் இப்போதைக்கு யான் அறியமுடியவில்லை.

பட்டினத்தடிகள் பாடல்:—திருவெண்காடர் என்ற பெயர் வழங்கிய மகானின் பாடல்கள் இவை. இவர் மதத்தாற் சைவர். 1110 வருஷங்கட்கு முன் இருந்தவர். மிகுந்த திரவிய வந்தராயிருந்தும் "காதற்ற ஊசியும் வாராதுகண்டீர் கடைவழிக்கே", "பற்றித்தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே" என்ற உண்மைகளை ஓர்ந்து துறவறம் பூண்டவர். மாதுர் பக்தியிற் சிறந்த மகான். இவரது சில பிரபந்தங்கள் "பதினோராந் திருமுறை"யுள் சேர்ந்துள்ளன.

நீதி நெறி விளக்கம்:—நியாயவழிகளை நன்கு விளக்கும் இந்நூல் 100 வெண்பாக்கள் கொண்டது. இதனை இயற்றியவர் குமரகுருபரசுவாமிகள்:— இவர் ஸ்ரீவைகுண்டத்தில் சுமார் 300 வருஷங்கட்குமுன் தோன்றிய சைவ வேளாளர். பிறக்கும்போதே ஊமையாக இருந்து திருச்செந்தூர் முருகக் கடவுளருளால் அத்தன்மை நீங்கினர் என்பர். இவர் இயற்றிய வேறு நூல்கள் காசிக்கலம்பகம், பண்டாரமும்மணிக்கோவை, மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ், திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, முதலியன. ஓர் நாள் நெடுநேரம் போசனம் செய்யாதிருந்த திருமலைநாயகரின் நிலையைக்கண்டு "வகுத்தான் வகுத்த வகை யல்லால், கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" என்ற குறள் உண்மையை எடுத்துக் குருபரர் அவனிடம்கூற, அதன் பொருத்தத்தையும், பொருளையும் கண்டுணர்ந்து மகிழ்ந்த அத் திருமலைநாயகனது வேண்டுகோட்கிணங்கித் திருக்குறளையே முதல் நூலாகக் கொண்டு நீதி நெறி விளக்கம் இவர் இயற்றினர் என்பர். இந்துஸ்தானியிலும் வல்ல இவர், துறவியாயிருந்து தமது 35 ஆவது வயதில் சிவபதமுற்றனர்.

இராமாயணம்:—ஸ்ரீராமன் விஷயமான இந்நூலின் முதல் ஆறுகாண்டங்கள் கம்பராலும், ஏழாவது காண்டம் ஒட்டக்கூத்தராலும் பாடப்

பட்டவை. கம்பர் திருவழுந்தூரில் வேளாள குலத்திற் றோன்றியவர். ஆதித்தன் என்பவன் இவரது தந்தை. அம்பிகாபதி இவரது குமாரன். இளமையில் கலைமகள் கடாட்சம் பெற்ற இவர், தம்மை யாதரித்த சடையப்ப வள்ளல் விருப்பிற் கிணங்க இராமாயணம் பாடினர். இவர்காலத்திய புலவர்கள் புகழேந்தி, ஔவை, முதலியோர். சடகோபரந்தாதி ஏரெழுபது, சரஸ்வதியந்தாதி முதலியன இவர் இயற்றிய பிறநூல்கள்.

குசேலோபாக்யானம்:— பாகவதத்தில் கிருஷ்ணனது சரித்திரத்தில் அடங்கிய கதை இது. இதனைத் தமிழில் இயற்றியோர் வல்லூர் தேவராசப் பிள்ளை. இவர் சைவர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களின் மாணவர். சூதசங்கிதை, தணிகாசலமாலை, முதலியன இவர் இயற்றியவை.

புறநானூறு:—(அறம் பொருளாகிய) புறப்பொருளைப்பற்றிக் கூறும் 400 அகவற் பாக்களாலாகிய இந்நூல் * 'எட்டுத்தொகை' யில் ஒன்று. இது பற்பல சமையங்களில் கடைச்சங்கக் காலத்துப் புலவர் பலரால் பாடப்பட்ட செய்யுட்கள் கொண்டது.

புறப்பொருள் வெண்பாமாலை:— புறப்பொருளின் இலக்கணத்தைப் பற்றிக்கூறும் வெண்பாக்களால் ஆகிய இந்நூல் 1160 வருஷங்கட்கு முன் இருந்த ஐயனாரிதனார் என்பவர் இயற்றியது. வெண்பா ஒவ்வொன்றின் முன்னும் அதனதன் துறையைத் தெரிவிக்கும் சொற்றொடர் அமைந்தது. இது பன்னிருபடலத்தின் வழி நூல் ஆகும்.

நாலடியார்:—இதன் வரலாறாதியன பாடபுத்தகத்தினின்றும் விவரமாக அறிந்துணர்க.

சீவகசிந்தாமணி:— † ஐம்பழங்காப்பியங்களுள் முந்தியது. ஜைன மதத்தினனான சீவகன் என்னும் அரசனது சரித்திரத்தைக் கூறும் இந்நூல் சுமார் 2000 வருடங்களுக்கு முன்பிருந்த திருத்தக்க தேவரால் இயற்றப்பட்டு கடைச்சங்கத்தாரங்கேறிய நூல் ஆகும்.

பெரும்பொருள் விளக்கம்:—இஃதெங்கும் கிடைத்திலது. புறத்திரட்டு என்ற நூலில் இதனின்றும் செய்யுட்கள் சில எடுத்தாளப்பட்டுள்ள விஷயம் தவிர, இந்நூலைப்பற்றியேனும், அதனை ஆக்கியோனைப் பற்றியேனும் ஏதும் அறியமுடியவில்லை.

---

*எட்டுத்தொகைகள்:—நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

† ஐம்பழங்காப்பியங்கள்:—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.

பழமொழி:— ஜைனாகிய முன்றுறையரையனார் இயற்றிய இந்நூல் *பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று. ஈற்றில் ஒவ்வொரு பழமொழியுடைய 400 வெண்பாக்கள் கொண்டது இது.

சிறுபஞ்சமூலம்:—இதுவும் பதினெண் கீழ்கணக்கினுள் ஒன்றாகும். கடைச்சங்கப்புலவரும், ஜைனருமான காரியாசான் இயற்றியது. "சிறுபஞ்சமூலம்" என்பதற்கு "ஐந்து சிறு வேர்கள்" என்பது பொருள். கண்டங்கத்திரி, சிறுமல்லி, சிறுவழுதுணை, நெருஞ்சி, பெருமல்லி, இவற்றின் வேர்கள் சிறு பஞ்ச மூல மாகும், இவ்வைந்தும் உடலுக்கு நன்மை பயப்பதுபோல் உயிர்க்கு நன்மை தரும் ஐந்தைந்து நீதிகளை ஒவ்வொரு பாடலுங்கொண்டுளதால் இந்நூலுக்குச் சிறுபஞ்சமூலம் என்ற பெயர் வாய்த்தது. இவ்வாறு அமைந்தமையின் அது உவமையாகு பெயர்.

மூதுரை:—"வாக்குண்டாம்" என்பது இதன் மறு பெயர். இது கடவுள் வாழ்த்து நீங்கலாக 30 செய்யுட்கள் கொண்டது. அரிய பலநீதிகள் புகட்டும் இச் சிறுநூல் அறிவிற்சிறந்த ஔவை இயற்றியது. ஔவை, திருவள்ளுவர் சகோதரி ஆதலின் அவர் வரலாறு இவளுக்கும் பொருந்தும். இந் நல்லிசைப் புலமை மெல்லியலார் இயற்றிய பிறநூல்கள், ஆத்திசூடி, கொன்றை வேய்ந்தான், நல்வழி, ஞானக்குறள், பந்தனந்தாதி, அசதிக்கோவை முதலியன. இவள் அதிகமான் நெடுமானஞ்சியிடம் தெய்வீக நெல்லிக்கனி பெற்றுப் பல வருடங்கள் உயிருடன் இருந்ததாகச் சொல்லுகின்றனர்.

நீதிவெண்பா:—உயர்ந்த பல நீதிகளைக்கொண்டு 100 வெண்பாக்களால் ஆகிய இந் நூல் யார் இயற்றியதெனப் புலப்படவில்லை. கடவுள் வாழ்த்தால் இயற்றியவர் மதம் சைவம் என்பதுமட்டும் விளங்குகிறது.

நல்வழி:—இந் நீதிநூல் சைவ உத்தமியாகிய ஔவை இயற்றியதே, கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 செய்யுட்கள் கொண்டு விளங்குவது இது.

திருக்குறள்:—இதுவும் பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றே. சிறந்த குறள் வெண்பாக்களே கொண்டமையால் இதற்குத் "திருக்குறள்" என்ற பெயர் அமைந்தது. பப்பத்துச் செய்யுட்கள் கொண்ட 133 அதிகாரங்களால் ஆகிய இதற்குப் பதின்மர் உரைசெய்துள்ளார். இத்திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் ஔவையின் சகோதரர். மைலாப்பூரில் வள்ளுவர் மனையில் வளர்ந்தவர். கற்பிற்சிறந்த வாசுகி கணவர். இவர்காலத்தில் விளங்கிய புலவர்கள் நக்கீரர், கபிலர் பாணர் முதலியோர்.

---

*18 கீழ்க்கணக்குகள் ஆவன:—நாலடியார், நான் மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியது நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை.

பன்னூற்றிரட்டு.

அறத்துப்பால்.

16-வது அதிகாரம்—ஈகை.

"பன்னூல் திரட்டு" என்பதற்கு, "பல நூல்களினின்றும் திரட்டிய சாரமான செய்யுட்கள் கொண்ட நூல்" என்பது பொருள். பன்னூல்=பல+நூல். 'பல' என்பது தன் முன் பிறசொல் வந்ததால் (நன் - உயிர். 20ஆவது விதிப்படி) அகரம் கெட்டுப் 'பல்' என நின்றது. பிறகு இப் பல்+நூல் என்பவற்றிலுள்ள நிலைமொழியீற்று லகரமும், வருமொழி முதல் நகரமும் [முறையே நன்-மெய் 24-ஆவது, 34-ஆவது விதிப்படி] 'ன' கரம் ஆயின. நூல்+திரட்டு=நூற்றிரட்டு [நன்-மெய் 24, 34-ஆவது விதிப்படி முறையே) லகர தகரங்கள் றகரம் ஆயின. நிற்க. பன்னூல்—அல்வழி பண்புத்தொகை. நூற்றிரட்டு—ஐந்தாம் வேற்றுமைத் தொகை. திரட்டு—திரள் தன்வினைப்பகுதி; டு—விகுதி செயப்படுபொருள் உணர்த்தும் விகுதி புணர்ந்து கெட்டது.

பஞ்சினால் நூல் ஆவது போல் சொற்களால் ஆவதாலும், நூல், மரம் முதலியவற்றின் கோணலை அறிந்து ஒழுங்கு படுத்துவதற்கு சாதனமாவது போல் மனக்கோணலை அறிந்து ஒழுங்கு படுத்தற்குக் கருவி ஆவதினாலும், புத்தகங்களுக்கு நூல் உவமையாகுபெயர்.

அறத்துப்பால்=தர்மத்தை உணர்த்தும் பகுதி. அறம் - மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன தவிர்தலும் ஆகும் "அறம்" என்பது "தக்கவை இன்ன" வென்று வரையறுக்கப்பட்டதன் காரணமாகப்பெற்ற பெயராகும். இதன் எதிர்மொழி மறம். இதற்கு 'தகாதவை இன்ன' என நூல்கள் மறுப்பன" என்பது பொருள்.

பால் - இங்கு சங்கேதத்தால் நூலின் பெரும் பிரிவு என்று கொள்க.

அதிகாரம்:—இங்கு பாலின் உட் பிரிவு அல்லது ஒழுங்கு.

ஈகை:— "'ஈ' 'தா' 'கொடு' எனும் மூன்றும் முறையே, இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை" ஆதலின், "ஈகை" என்பது இழிந்தோனை வறியனுக்கு, அவனினும் மிக்கோனை உடையோன், அவனுக்கு வேண்டிய பொருளைக் கைம்மாறு கருதாதும், மகிழ்ந்தும், முழுமனதுடனும் கொடுப்பதாகும்.

அருமையான தமிழ்ப்புத்தகங்கள்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின்

அக்ராஸநாதிபதியும்

மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும், வியாசபோதகருமாகிய

ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் இயற்றிய

அரும் பொருட் டிரட்டு.

இதுவரை வெளிவாராதது "உருக்குருகக் கல்லுருகக் கல்லாதர் உளம் உருக"ச் சந்தர்ப்பத்திற்கேற்ப இவ் ஐயரவர்கள் இயற்றிய பல சாதுரிய செய்யுட்களும், அநேக சிறந்த ஆங்கிலப் பாக்களின் இனிய எளிய "தண்டமிழ் மொழியிற் பண்டிதரும் உணரத் தரும் விதம் அமைந்த" மொழி பெயர்ப்புக்களும், அரிய பெரிய பல உபந்நியாசங்களும் வியாசங்களும் அடங்கியது. பிரசங்கம் செய்வோர்க்கு இது பெறுதற்கரிய ஓர் பேருதவும். மாணவர்க்கும் உபாத்தியாயர்கட்கும் இதனினும் இன்றியமையாதது வேறொன்றில்லை. விலை ரூ 1—8—0.

கோமதிகோகிலம்......து.

படிக்குந்தோறும் இன்பம் பயக்கும் இந்த 'நாவல்' சிலமாதங்களுக்குமுன்புதான் வெளியாயிற்று. சிறியோர் முதல் யாவரும் வாசிக்குமாறு எளியநடையில் பசுமலைஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-N.R. சுப்பிரமணிய சர்மா அவர்களால் எழுதப்பெற்று சேற்றூர் சம்ஸ்தான மஹா வித்வான் ஸ்ரீமத். M. R. கந்தசாமிக்கவிராயர் அவர்கள் எழுதிய முகவுரையுடன் வெளியானது. விலை அணா 10.

மதனகாந்தி.

படிப்பவர்க்கு இன்பம் பயக்கும் ஓர் இனிய தமிழ் நாவல்.

தனியாயிருந்து உற்சாகமாகக் காலங்கழிப்பதற்குரிய நாவல்களில் சிறந்தது இதுவே என்பது புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நேயர்களுக்கே நன்கு விளங்கும். கற்பையே அணியாகவணிந்த இக் கதாநாயகியாகிய மதனகாந்தியானவள் தன் சிறு வயதுமுதல் நடந்துகொண்ட ஒழுக்கமும், அவளது வாய்மையும், தூய்மையும் விக்கிரமன், ஸ்ரீநிவாஸன் முதலிய தீயர்பாலகப்பட்ட ஆபத்துக் காலத்திலும் அவளது அஞ்சாத நெஞ்சுறுதியும், அவ்வுறுதிக்கேற்ற சூழ்ச்சியும் யாவரையும் பிரமிக்கச் செய்யுமென்பதற் கையமில்லை. புத்தகத்தைப் படிப்பதற்குக் கையிலெடுத்தால் படித்து முடிக்குமுன் கீழேவைக்க மனம் வரமாட்டாதென்பது திண்ணம். விலை ரூ 1.

பன்னூற்றிரட்டு.

ஈகை.

திருமந்திரம்.

ஒழுக்க மில்லாதார்க்குத் தரும் கொடை பயன் தராது.

*கோலவறட்டைக்குனிந்துகுளகிட்டுப்
பாலைக்கறந்துபருகுவதேரொக்குஞ்
சீலமுநோன்புமிலாதவர்க்கீந்தது
காலங்கழிந்தபயிரதுவாகுமே. (1)

(அரும்பொருள் விளக்கம்.) கோலம் - அழகு; வறடு - பால்வற்றிய பசு; குனிந்து - வணங்கி; குளகு - இலை, தழை; ஏர் - தன்மை.

(உரை) சீலமும் நோன்பும் இலாதவர்க்கு ஈந்தது - நல்லொழுக்கமும் தவமுமில்லாதவர்க்குக் கொடுத்தது; குனிந்து - வணங்கி; கோலவறட்டை அழகிய பால்வற்றிய பசுவுக்கு:—குளகுஇட்டு - இலை தழை ஆகியன ஈந்து, பாலைக்கறந்து—; பருகுவது ஏர் ஒக்கும் - குடிக்கும் தன்மையை நிகர்க்கும்; (அன்றியும்) அது - அத்தானம்; காலம் கழிந்த - அகாலத்தில் விளைவித்த; பயிர் ஆகும் - பயிர்போல் பயன் அற்றதாகும்.

வறட்டுப் பசுவினின்றும் பாலும், அகாலத்திய பயிரினின்றும் பயனும் பெறுதல் எவ்வாறு முடியாதோ அவ்வாறே அபாத்திரர்க்கு ஈயும் கொடையால் புண்ணியம் பெறமுடியாது. வறடு - இது ஆகுபெயராய் வறட்டுப் பசுவை உணர்த்தியது. வறட்டை - உருபுமயக்கம். ஏர் - சிறப்பு; 'பருகுவதே யொக்கும்' என்றும் பாடம்.

அன்புள்ளோர்க்கே தானம் செய்யவேண்டும்.

*ஈவதுயோகவியமநியமங்கள்
சார்வதறிந்தன்புதங்குமவர்க்கன்றி
யாவலறிந்தன்புதங்காதவர்களுக்
கீவபெரும்பிழையென்றுகொள்ளீரே. (2)

(உரை) யோகம் இயமம் நியமங்கள்—யோகமார்க்கமாகிய இயம நியமங்கள்; சார்வது அறிந்து - ஒருவனிடத்தில் பொருந்தியிருப்பதைக்கண்டு;

...பு தங்கும் அவர்க்கு - சகல ஆன்மாக்களிடத்தும் அன்புள்ளவர்களுக்கே; ...வல் அறிந்து—அவருடைய விருப்பத்தைத்தாமே தெரிந்துகொண்டு; ஈவது அன்றி - கொடுத்தல் வேண்டுமேயன்றி; அன்பு தங்காதார்க்கு ஈவ - அன்பு இல்லாதவர்களுக்குக் கொடுப்பவை; பெரும்பிழை என்று கொள் மிகுந்த தவறான காரியமென்று கொள்வீ...ளாக.

யோகம்:— இயமம், நியமம், ஆ...னம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி. இயமம் - கொலை, களவு செய்யாமை, முதலியன. நியமம் - மெய்ந்நூல் ஆராய்ச்சி, தவம், தேவ வழிபாடு, திருப்தி முதலியன. யோகவழி - மனதை ஒருவழிப்படுத்தும் வழிகள். அன்பு - உற்றார் உறவினரிடம் வைக்கும் நேசம். தமக்குச் சம்பந்தமில்லாத கீழ்தரப் பிராணிகளிடம் வைக்கும் பிரியத்திற்கு அருள் என்று பெயர். ஈவ - வினையாலணையும் பெயர். இது - பொருளால் செயப்படுவினை.

பக்தியுடன் ஈதலும் ஏற்றலும் வேண்டும்.

*மண்மலையத்தனை மாதன மீயினு
மண்ணலிவனென் றஞ்சலியத்தனு
மெண்ணியிறைஞ்சாதார்க்கீந்தவிருவரு
நண்ணுவரேழாநரகக்குழியிலே. (3)

(அ - ம்) மண் - பூமி; அண்ணல் - பெருமை தங்கியவன்: கடவுள்; நண்ணு - சேர்.

(உரை) மண் - இப்பூவுலகில்; மலையத்தனை மாதனம் ஈயினும் - மலை அவ்வளவு சிறந்த செல்வத்தைக் கொடுத்தாலும்; இவன் அண்ணல் என்று - பெறுவோன் பெருமை தங்கிய கடவுள் என்று எண்ணி; அஞ்சலியத்தனும் - கூப்பிய கையோடுகூட; இறைஞ்சாதார்க்கு - வணங்காதவர்களுக்கு. ஈந்த - கொடுத்த பொருளினாலே; இருவரும் - தருவோன் பெறுவோனாகிய இருவரும்; ஏழ் ஆம் நரகக்குழியிலே - எழுவகை நரகத்திலும்; நண்ணுவர் - சேர்வர்.

இது வித்யாகுருவுக்கும் அதிதிகட்கும் தரும் தானத்தைக் குறித்துக் கூறியதாகும்: "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" அதிதி தேவோபவ: என்ற மகா வாக்யங்களால் முற்கூறிய இருவரும் கடவுளுக்கு நிகராதல் காண்க. பயபக்தி விசுவாசமன்றிக் கொடுத்தலும், அங்ஙனம் கொடுத்தான் பாற் பெறுதலும் பாபமாதலின், ஈந்தோன் ஏற்றோன் ஆகிய இருவரும் நரகம் எய்துவர் என்றார். "அண்ணல் இவன் என்று அஞ்சலியத்தனும் எண்ணி இறைஞ்சாதார்க்கு"— என்பதற்கு எல்லாம் வல்ல இறைவனையே "சாக்ஷாத்

கடவுள் இவர்" என்று நினைந்துணர்ந்து இறைஞ்சிக் கைகூப்பி வணங்கா
வர்க்கு (அதாவது ஆஸ்திக புத்தியில்லாத நாஸ்திகர்க்கு) என்றும் பொருள்
தொனித்தல் காண்க. இங்கு எண்ணல் - மானதம்; இவன் எனல் - வாசிகம்;
இறைஞ்சல் காயிகம்.

மண் - சினையாகுபெயர்; மலை - பார்த்தோரைத் தன் உயரம், கம்பீரத்
தோற்றம், முதலியவற்றால் மலைக்கச் செய்வது. மா - மகா என்பதன் திரிபு;
அண்ணல் - பெருமை; இங்கு பெருமை தங்கிய கடவுளுக்கு ஆகியது; அத்
தம் - ஹஸ்தம் என்பதன் திரிபு; அந்த - எச்சத்திரிபு. எழுவகை நரகம்:—
கூடசாலம், கும்பிபாகம், அள்ளல், அதோகதி ஆர்வம், பூதி செந்து என்
பனவாம்.

மூவகைத் தானங்கள்.

என்னானுமோருதவியாதொருவன் யார்க்கெனினும்
தன்னான்முடிவதெனிற்றானேமுடித்தறலை
சொன்னான்முடித்தலிடையாகுஞ்சொல்லுகினும்
பன்னாண்மறுத்துப்புரிதல் கடைப்பான்மையதே. (4)

(உரை) என் ஆனும் ஓர் உதவி - ஏதேனும் ஒருதவியை; யாது ஒருவன் -
எவனேனும் ஒருவன்; யார்க்கு எனினும் - எவனுக்காயினும், தன்னால் முடி
வது எனில்—; தானே முடித்தல் - தானாகவே (அதாவது அவன் கேட்காத
தற்குமுன் குறிப்பறிந்து செய்து தரல்) தலை உத்தமமாகும். சொன்னால்
முடித்தல் - கேட்டுக்கொண்டதன் பின்பு; முடித்தல்—; இடை ஆகும் -
மத்திமம் ஆகும்; சொல்லுகினும் - அவ்வாறு கேட்டும்; பல் நாள் மறு
த்து—; புரிதல் - பின்பு செய்வது; கடை பான்மையது - அதமத் தன்
மையதே.

சூரபதுமன் என்னும் அசுரனது கொடுமைக்கஞ்சிய தேவர் வேண்டு
கோட்கிணங்கிப் பிரமன் மன்மதனை அழைத்து "கல்லால விருக்ஷத்தடி
யில் யோக நிலையில் அமர்ந்து சநகாதி நால்வர்க்கு மறைப்பொருளை மௌன
நிலையில் உணர்த்திக்கொண்டிருக்கும் பரமசிவன், மோகநிலை எய்திப் பார்
வதியைச்சேர்ந்து குமரனைப் பெறுதற்கான செய். அக்குமாரனாலேயே
நம் துன்பம் முற்றும் ஒழியவேண்டியிருக்கிறது" என மன்மதன் முதலில்
பரமசிவனது ஆற்றலை உணர்ந்து அவ்வாறு செய்ய மறுத்துவிட, மீண்டும்
பிரமன் அவனைக் கட்டாயம் செய்து கூறியவை இவ்வார்த்தைகள்.

என் - எவன் என்பதன் விகாரம்; இது ஒன்றன்பால், பலவின் பாலா
கிய இரண்டிற்கும் பொது; யார் - ஆண் பெண் பலர் என்னும் முப்பாலுக்

பொது. ஆனும் - ஆயினும் என்பதன் மரூஉ. யாதொருவன் - உலக
[illegible]க்கு; யார் ஒருவன் என்றிருத்தலே சிறப்பு - சொல்லுகினும் உ, கு சாரி
[illegible]யைகள். இன்விகுதி காலங்காட்டிற்று.

காஞ்சிப்புராணம்.

கொடையா[illegible]துவதும் பயன்.

கொடையேயெவர்க்குமெப்பேறுங்கொடுக்குநெறியிற்பிறழாத
கொடையேயாருந்தன்வழியினொழுகச்செய்யுங்குறைதீர்ந்த
கொடையேபகையையுறவாக்குங்குலவும்பூதமனைத்தினையும்
கொடையேபுரக்குமென்றுள்ளங்கொள்ளப்புகன்றான்கவுதமனே. ()

(அரு) பேறு - பயன்; நெறி - வழி; பிறழ் - தவறு; பூதம் - பிராணி; குலவு - விளங்கு.

(உரை) கொடையே—; எவர்க்கும்—; எ பேறும் - எல்லாப் பயன்களையும்; கொடுக்கும்—; நெறியிற் பிறழாத - வருணாசிரம முறை திறம்பாத; கொடையே—; யாரும் தன் வழியின் ஒழுக செய்யும்—; குறைதீர்ந்த - நிறைந்த; கொடையே—; பகையை உறவு ஆக்கும் - பகைவரைச் சிநேகராக்கும்; கொடையே—; குலவும் பூதம் அனைத்தினையும் - (உலகத்தில் விளங்கும் பிராணிகளை யெல்லாம்; புரக்கும் - காக்கும்; என்று—; உள்ளம் கொள்ள - கேட்டோர் மனத்திற் பதியும்படி; கவுதமன் கூறினன் - கௌதம மகரிஷி கூறினர்.

நைமிசாரணிய வாசிகள் சிவபிரானைக் காணும் விதத்தைப்பற்றித் தத்தமக்குத் தோன்றியவை கூறியபொழுது "தானமே தக்கவழி" என்று அதனைப்பற்றிக் கௌதமர் சொல்ல நேர்ந்தபோது சொல்லியது இது.

பேறு - இங்கு தர்மார்த்த காம மோக்ஷங்களாம். நெறியின் - இன், 5-ஆம் வேற்றுமை நீக்கற்பொருள். வழியின் - இன் 7-ஆம் வேற்றுமை; பகை, உறவு - பண்பாகுபெயர்கள்; கவுதமன் : கோதமன் குமாரன்; தத்திதாந்தம்.

தணிகைப்புராணம்.

அபாத்திரர்க்கு ஈயாமல் பாத்திரர்க்கு ஈதலே புண்ணியம்.

திரைசெய்நீர்விழுஞ்சிலையினைப்புணையன்றிச்சிலகரையேற்றுதாற்
புரைசெய்பாவத்தினழுந்தினர்தமைப்புரையொழிந்தவர்தாமன்றி

நிரைசெய்மேற்கதிசெலுத்தவல்லாரலர்நிகழ்கரிசினாற்று, [டோர்.()
லுரைசெய்பாத்திரமபாத்திரமறிந்தளித்தொழிக்கநற்பயன்வேட்

(அ - ம்) திரை - அலை, சிலை - கல், புணை - தெப்பம், புரை - குற்றம், வேட்டோர் - விரும்புவோர்.

(உரை) திரை செய்நீர் - அலையைச் செய்கின்ற கடல் நீரில்; விழும் சிலையினை - விழுகின்ற கற்களை; புணையன்றி - (கரையேற்றும்) தெப்பமல்லாது; சிலை - மற்றொரு கல்லானது; கரை எற்றுது - கரைகொண்டு சேர்க்காது; (அதுபோல்) புரை செய்பாவத்தில் அழுந்தினர் தம்மை - குற்றமுள்ள பாவத்தில் ஆழ்ந்திருப்பவரை; புரையொழிந்தவர் தாம் அன்றி-அக்குற்றம் நீங்கியவர்களே யல்லாமல், நிகழ் - (நிந்தித்து) உரைக்கும்; கரிசினர் - குற்றமுள்ளவர்கள்; நிரைசெய் - ஒழுங்கான; மேற்கதி - நற்கதியில்—; செலுத்த வல்லார் அலர் - சக்தி இல்லாதவர் ஆவர்; அற்றால் - ஆகையால்; பயன் வேட்டோர் - நற்பயனை (புண்ணியத்தை) விரும்புவோர்கள்; உரைசெய் பாத்திரம் அபாத்திரம்—நூல்களிற் சொல்லப்படுகின்ற தக்கார் தகாதாரை - அறிந்து—; அளித்து ஒழிக்க - (முறையே) அவர்களுக்குத் தந்தும் தராமலும் இருப்பாராக.

திரை - சுருட்டு இது முதல் நிலைத்தொழிற்பெயர். ஆகுபெயராய் அலையை உணர்த்திற்று. புணை - பல பலகைகள் ஒருங்கே புணைக்கப்பட்டது. வேட்டோர் - வேள் - பகுதி; சிலை - சிலா என்பதன் திரிபு. அற்று - அன்னது என்பதன் திரிபு. ஆல் - அசை.

அறிவிலார் இயல்பும்; இல்லை யென்பதன் இழிவும்.

தருக்குறுஞ்செல்வமெய்திற்றருக்கினுற்பிழைகளெல்லாம்
பெருக்குநல்கூரினந்தோபிறருழையிரந்துசேறன்
மரித்தலிற்றுயரமீண்டும்வந்தவர்க்கிரக்கமற்றக்
காத்தன்மற்றதனினூங்குக்கடுந்துயரறிவிலார்க்கே. (7)

(அ - ம்) தருக்கு - கர்வம்; உறும் - உண்டாகும்; நல்கூர் - வறுமையடை; உழை - இடம்; சேறல் - செல்லல்; ஈண்டும் - மிகும்; கா - ஒளித்துவை; ஊங்கு - மிக்க;

(உரை)—அறிவிலார்க்கு - மெய்யறிவு இல்லாதார்க்கு செல்வம் எய்தின் - பொருள் கிடைத்தால்; தருக்கு உறும் - கர்வம் உண்டாகும்; தருக்கினுல்—, பிழைகள் எல்லாம்—; பெருக்கும் - அதிகரிக்கும்; நல்கூரின் - வறுமைஉற்றுலோ; அந்தோ—ஐயோ!; பிறர் உழை இரந்து சேறல் - பிற

ரிடம் யாசித்துச் செல்லலால்; மரித்தலின் துயரம் ஈண்டும் — மரண வேதனையினும் அதிக துன்பம் பிறும்; வந்தவர்க்கு - வந்த யாசகர்க்கு; இரக்கம் அற்று - கருணையின்றி; கரத்தல் - கொடாது பொருளை ஒளித்தல்; அதனின் ஊங்கு - அதனினும் மிக்க; கடு துயர் - கொடுந்துன்பமாகும்.

திருத்தணிகையில் தவம்புரிந்திருந்த அகஸ்தியர்முன் முருகக்கடவுள் தோன்றி, அவரது வேண்டுகோட்கிணங்கித் தமிழும்,தத்துவஞானமும் உபதேசிக்கையில் மானிடப்பிறவி முதலியவற்றின் துன்பங்களை எடுத்து உணர்த்திய சமையத்திற் சொல்லியது இது.

"மெய்யறிவுடையார் தம் பொருளாற் செருக்கர்திய தீங்கெய்தாமல் நல்வழியில் அதனை உபயோகப்படுத்துவர். வறுமை எய்தினும் யாசியார்' பேதையார்க்குச் செல்வத்தாலும் வறுமையாலும் துன்பமே. வறியோர்க்கு ஈயாமை வறுமையினும் கொடிது" என்ற விஷயங்களை இச் செய்யுளால் அறிக.

செல்வம் - நிலைத்திராமல் செல்லும் தன்மையது. செல் பகுதி; அம் விகுதி; வ் பெயர் இடைநிலை. நல் கூர் = நல்கு + ஊர்; [நல்கு - கொடு; ஊர் - (பெறச்) செல்] ஆகவே நல்கூர்தலாவது கொடுத்ததைப் பெற்றுச் செல்லுதலாம். வறிஞரே இவ்வாறு செல்பவராதலின் நல்குரவு, வறுமைக்கு ஒரு பெயராயிற்று; சேறல் - செல் பகுதி; தல் விகுதி; பகுதி நீண்டது விகாரம்; தகரம் றகரமாகி அதனால் லகரம் கெட்டது சந்தி. அதனின் - இன் ஐந்தன் உருபு, எல்லைப்பொருள். துயரம் - அம் சாரியை.

விநாயகபுராணம்.

இரக்கமுடனும் இல்லையென்னுமலும் இகழாதும் ஈதல்.

இரப்பவன் வாளாதேகவிலனெனுமெவ்வங்கூறு
திரப்பினையிரப்பனன்றுமிதனினன்றுவதாகு
மிரப்பவனிலனென்றூனியம்பியவெவ்வஞ்சொல்லென்
றிரப்பினும்பிறர்பாற்கூறுதிரக்கமோடீதன்மைந்தா (8)

(அ - ம்) வாளாது - வீணாக; எவ்வம் - துன்பமொழி; ஆ - மிகுதியாக;

(உரை) மைந்தா - மகனே!; இரப்பவன் - நின்பால் யாசிப்பவன்; வாளாது ஏக - (எதும் பெறாமல்) வீணாக (வெறுங்கையனாய்ச்) செல்லுமாறு இலன்-(அவனை நோக்கி) 'நீ கேட்கும் பொருள் கொண்டிலேன்; எனும் எவ்வம் கூறாது - என்ற துன்ப மொழி கூறாமல், இரப்பினை இரப்பல் - அவன்

யாசித்ததைக் கொடுத்துத் திருப்தி செய்தல்; நன்று ஆம் - உத்தமம் ஆகும்; இரப்பவன் - யாசித்தவன்; இலன் என்று - நான் பொருளில்லாதவன் என்று; ஆர - மிகுதியாக, இயம்பிய எவ்வம் - கூறிய துன்பமொழியை; சொல் என்று இரப்பினும் - நீ சொல்லுக என்று உன்னை எவரேனும் வேண்டினாலும்; பிறர் பால் கூறாது - (அவன் துன்பமொழியாகிய அதனைப்) பிறரிடம் கூறாமல்; இரக்கமொடு ஈதல்—; இதனின் நன்று ஆவது ஆகும் - முன் சொன்னதினும் உத்தமம் ஆகும்.

இதுமுதல் 5-கவிகள் சௌராஷ்டிர தேசத்தில் தேவநகரத்தில் அரசு புரிந்த சோமகாந்தன் தன் மகன் ஏமகண்டனுக்கு முடிசூட்ட எண்ணி, அவ்வாறு செய்யுமுன் அறநெறி உணர்த்தியபோது உரைத்தவை. இவ்வைந்து செய்யுள்களும் "இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையார் கண்ணே உள" என்ற குறளுக்கு விருத்தியாகும்.

வாளாது - இடைச்சொல். ஆம் - ஆகும் என்பதன் விகாரம். நன்று - று பண்புப் பெயர் விகுதி. இரப்பினும் - உம் சிறப்பு.

குறிப்பு அறிந்தும், திருப்தியாகவும் நிரம்பக்கொடுத்தல்.

அருத்தியி[illegible]லனென்னுமுனளித்தலுமிலனென்றப்பா
லுரைத்[illegible]சாலவுதவலுமேற்கின்றானும்
வ[illegible]ன்னமைவழங்கிடவரைவில்செல்வம்
[illegible]ான்றிலொன்றுபுகழ்மிகவிளங்கிநிற்கும். (9)

(அ-ம்) [illegible]தி - ஆசை; சால - மிகுதியும்; ஏல் - பெறு; வரைவு - அளவு; பொ[illegible]த்தல் - கொடுத்தல்.

(உரை) இலன் என்னுமுன் - (யாசகன் தான் பொருள்) இல்லாதவன் என்று சொல்லாததன்முன் (குறிப்பறிந்து); அருத்தியின் அளித்தலும் - ஆசையுடன் கொடுத்தலும்; அப்பால் தன்னிடம் பொருள்பெற்ற) பின்பு; இலன் என்று உரைத்திலன் ஆக - (பிறன்பாற் சென்று) தான் பொருளற்றவன் என்று யாசியா வகையாக; சால உதவலும் - மிகுதியாகத் தாலும்; ஏற்கின்றானும் - பொருள் பெறும் யாசகனும்; வருந்து உற - வருத்தம் உண்டாகும்படி; இலன் என்னாமை - பொருளில்லேன் என்னாமல்; வழங்கிட - கொடுக்கும்படி; வரைவு இல் செல்வம் - அளவற்ற செல்வத்தை; பொருத்தலும் - ஈதலும்; (ஆகிய இவை) ஒன்றில் ஒன்று - ஒன்றினும் ஒன்று; புகழ்மிக விளங்கி நிற்கும் - (முறையே) கீர்த்தி அதிகமாகப் பிரகாசித்து நிற்கும்.

குறிப்பறிந்தீதல் நன்று : அதனினும் நன்று திருப்தியுறக்கொடுத்தல் : அதனினும் நன்று, பெற்றோன் பிறர்க்கும் தரும்படி அவனுக்கு அபரிமிதமாக அளித்தல் என்பது இதன் கருத்து.

வருத்து - முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்; அருத்தியின் - இன் ஐந்தாம் வேற்றுமை எதுப்பொருளது.

புகழும் புண்ணியமும் வேண்டின், இரப்போனை இகழாது
யாக்கையும் அளித்தல்.

நலமிகுசெல்வம்பேறுநல்குரவினரைக்காத்த
லிலனறமாதிசீர்த்தியிலனெனப்பிறர்சொலெவ்வ
வல்லுரைக்கஞ்சியேனும்வறியனையிலனென்றெள்ளா
தலர்புகழ்பயனும்வேண்டினாக்கையுமளிக்கமைந்தா. (10)

(உரை) மைந்தா - மகனே; அலர் புகழ் - பரந்தகீர்த்தியும்; பயனும் - புண்ணியமும்; வேண்டின் - வேண்டுமாயின்; நலமிகு செல்வம்—; பேறு - கொடை; நல்குரவினரைக் காத்தல் இலன் - தரித்திரரைக் காத்தல் இலன்; அறம் ஆதி சீர்த்தி இலன் - தர்மம் முதலியவற்றாலாகும் சிறப்புப் பெற்றிலன்; என பிறர் சொல் - என்று பிறர் சொல்லுகின்ற; வல் எவ்வம் உரைக்கு அஞ்சி - வலிய துன்ப (வசை) மொழிக்குப் பயந்தாயினும்; வறியனை இலன் என்று எள்ளாது - பொருளில்லாத ஏழையை இவன் [illegible] 'ரித்திரன் தானே' என்று இகழாமல்; ஆக்கையும் அளிக்க - (அவன் வே[illegible]) உன் சரீரத்தையும் (மகிழ்ந்து) தருவாயாக.

அலர்புகழ் - வினைத்தொகை. அறம் - மனு முதலிய நூ[illegible]லில் விதித்ததைச் செய்தலும் விலக்கியதைத் தவிர்த்தலும் ஆகும். அறம் X மறம். ஆக்கை - யாக்கை யென்பதன் மரூஉ. இங்ஙனமே யாறு, யாடு, யாய், யானை, யார் முதலியன முறையே ஆறு, ஆடு, ஆய், ஆனை, ஆர் முதலியனவாக வழங்கல் காண்க. மைந்து - வலிமை; அதனையுடையவன் மைந்தன் - தாய் தந்தையர் தளர்ச்சியுற்ற காலத்தில் அவர்கட்கு வலிமையாய் நிற்பவன் என்பது கருத்து.

ஈகையே புகழுடம்பிற்குக் காரணம்

சாதல்வந்தடுத்தகாலுந்தனக்கொருசாதலின்றிப்
பூதலமிறக்குங்காறும்புகழுடம்பிருக்குமந்தக்
கோதறுபுகழின்யாக்கைகொடையினாற்செல்வங்கூடி
வாழ்தலையுடையாரன்றேவானமும்வணங்குவீரா. (11)

(அ - ம்) கூர - மிக; நீர்மை - தன்மை; செல்வம் - வளமை.

(உரை) சாதல்வந்து—; அடுத்தகாலும்—நேர்ந்த காலத்திலும்; தனக்கு ஒரு சாதல் இன்றி - தனக்கோர் அழிவு இல்லாமல்; புகழ் உடம்பு - அவனது கீர்த்தியாகிய உடம்பு; பூதலம் இறக்கும் காறும் - பூலோகம் அழியும் அளவும்; இருக்கும்—; அந்த கோதறு புகழின் யாக்கை - அக்குற்றமற்ற புகழுடம்பு; கொடையினால் செல்வம் கூர - ஈகையினால் வளமை மிக; வாழ்தலை உடையார் அன்றே - இந்நிலத்து வசிப்பவர் அன்றோ; வானமும் வணங்கும் நீரார் - தேவரும் வணங்கும் தன்மையை உடையவர்கள்.

இச்செய்யுளின் கருத்தை "இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக," "நிலவரை நீள்புகழ் ஆற்றிற் புலவரை போற்றாது புத்தேள் உலகு," "பூதவுட லாயவிது பொன்றுமொரு கணப்பொழுதின், ஆதலருக் கெப் பொருளும் அவர்க்கு தனத் தருங்கொடையான், மேதகுநன் நாவலர்வாய் மேவுமுடம் பொன்றதுதான், சாதலின்றி நித்தியமாத் தழைத்து வரும் புகழுடம்பு" என்பவற்றின் கருத்தோடு ஒப்பிடுக. புகழுடம்பு ஆவது - கீர்த்தியால் பெயரை என்றும் நிலை நிறுத்தல். கால் - காலம் என்பதன் விகாரம். பூதலம் - இருபெயரொட்டு. புகழின் - இன் சாரியை; வான் - இடவாகு பெயர். அந்த - அ என்ற சுட்டின் மரூஉ. யாக்கை - எலும்பு நரம்பு முதலியவற்றால் கட்டப்பட்டது. இதில் யா - பகுதி, கை - தொழிற்பெயர் விகுதி. இது தொழிலாகுபெயராய் உடம்பை உணர்த்திற்று.

நானும் உண்டு இல்லார்க்கும் ஈதலே செல்வத்தின் பயனும்

வைத்துப்பொருளைத்தா னுகரான்வழங்கானிருந் துஞ்செத்தானே
செத்தபின்னரென்செய்வான்றியார்கொள்வரீட்டுதலான்
மெத்தும்வருத்தமேயன்றிவேறொன்றில்லையாதலினாற்
பொத்தும்வெறுக்கைநன்றியுறல்புசித்துவழங்கலேயாகும். (12)

(அ - ம்) நுகர் - அனுபவி, வழங்கு - கொடு; ஈட்டு - தேடு; மெத்து - மிகு; பொத்து - பத்திரப்படுத்து. வெறுக்கை - செல்வம்.

(உரை) பொருளை வைத்து - பணத்தைத் தேடி வைத்து; தான் நுகரான் - தானும் அனுபவியாதவனாய்; வழங்கான் - பிறர்க்கும் தாராதவனாய் இருப்பவன்; இருந்தும் செத்தானே—; செத்தபின்னர் - உண்மையாகவே இறந்ததன் பின்; என் செய்வான்? - அவன் அப்பணத்தைக் குறித்து என்ன செய்யக் கூடும்?; யார் கொள்வர்—; ஈட்டுதலால் - பொருளைத் தேடுதலால்; மெத்தும் - மிகுந்த; வருத்தமே அன்றி—; வேறொன்று இல்லை—; ஆதலினால்—; பொத்தும் வெறுக்கை - பத்திரப்படுத்திய செல்வம்; நன்றி உறல் - பயன் பெறுதலாவது; புசித்து - தானும் உண்டு; வழங்கலே - பிறர்க்கும் கொடுத்தலே; ஆகும்—;

“ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்,” “பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்த கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங் காவிதான் போயின பின் யாரே அனுபவிப்பார், பாவிகாள் அந்தப்பணம்” “உடாஅதும் உண்ணாஅதும் தம்முடம்பு செற்றும் கொடாஅது நல்லறமும் செய்யார் - கொடாஅது, வைத்தீட்டி னார்இழப்பர் வான்றோய் மலை நாட! உய்த்தீட்டுந் தேனீக் கரி.” என்பவற்றுடன் இச் செய்யுட்கருத்தையும் ஒப்பிட்டுணர்க.

இருந்தும் - உம் உயர்வு சிறப்பு. பின்னர் - அர் சாரியை; ஆதலினால் - இன் சாரியை. அநித்தியமான சரீரத்தை “மெய்” என்பது போல் யாவரும் விரும்பும் பொருளை வெறுக்கை என்னல் “எதிர்மறை இலக்கணை” [வெறுக்கை - “உண்மையுணர்ந்தோர் வெறுப்பது எனப்பொருள் படும்” என்பாரும் உளர்] நன்றி - றி பண்புப்பெயர் விகுதி.

திருக்கூவப்புராணம்.

தானமே பரமசிவன் அருள் பெறச் சாதனம்.

மனைகடோறுமுற்றிரந்திடுகபாலியுண்மகிழ
வனகமால்விடையூர்ந்துவந்தெளிதினிலருளக்
கனைகருங்கடலுலகினிற்செய்வதுகருதின்
வினைகடீர்ந்திடுதானமேயன்றிவேறுளதோ. (13)

(அ - ம்) கபாலம் - மண்டையோடு: அதனையுடையவன் கபாலி: பரமசிவன். அனகம் - பரிசுத்தம், புண்ணியம்; மால் - பெருமை; விடை - காளை; ஊர் - நடத்து; கனை - சப்தி;

(உரை) மனைகள் தோறும் - வீடுகள் தோறும்; உற்று - அடைந்து; இரந்திடு - யாசிக்கும்; கபாலி - மண்டை யோடு கைக்கொண்டவனான பரம சிவன்; உள்மகிழ - மனம் களித்து; அனகம் மால் - பரிசுத்தமான பெருமை தங்கிய, விடை ஊர்ந்து வந்து - இடபாரூடராக வந்து; எளிதினில் அருள - சுலபமாக அருள் புரியுமாறு; கனை - சப்திக்கின்ற; கருங் கடல் உலகினில் - கரிய கடல் சூழ்ந்துள்ள இவ்வுலகினுள்; செய்வது - மனிதரானவர் செய்து தீரவேண்டிய காரியம் இன்னது என்று; கருதின் - யோசித்து எண்ணினால்; (அக்காரியமானது) வினைகள் தீர்ந்திடு - நல்வினை தீவினையாகிய இருவினைகளும் போகும், தானமேயன்றி - ஈகையே அல்லாமல்; வேறு உளதோ-; (வேறேதுமில்லை.)

பரம சிவன் மனைகள் தோறும் இரந்தது:—ஒரு காலத்தில் பிரம தேவன் தானே பெரியவன் என்று கருதித் தன் நடுத்தலையால் வணங்காமல்

சிவனை இகழ்ந்துபேச, அவர் வைரவ உருக்கொண்டு அத்தலையைக் கிள்ளி விட்டனர். அது அவர் கையில் ஒட்டிக்கொண்டு விடவே, அது அகலுமாறு ஊர்கள் தோறும் அதிற் பிச்சை எடுக்க அவர் புறப்பட்டனர். கடைசியில் காசிக்குச் செல்ல அங்கு அது அவர் கையின்றும் நீங்கிற்று என்பது புராண வரலாறு.

அனகம்=ந+அகம்; அகம்=பாபம்; அநகம்=பாபமின்மை : புண்ணியம். விடை - வ்ருஷபம் என்பதன் திரிபு. ஊர்ந்து வந்தி என்பதை ஊர்ந்து+உவந்து எனப் பிரித்து "செலுத்தி மகிழ்வுடன்" எனப்பொருள் கொள்ளினும் அமையும். கனை கடல் - வினைத்தொகை; கருங்கடல் - பண்புத்தொகை. தீவினை மட்டுமேயன்றி நல்வினையும் பிறப்பிறப் பிற்கே காரணம் ஆதலின் - "வினைகள் தீர்ந்திடும்" என்றார்.

கொடைப்பயன் அறிந்தோர் ஆவியும் கொடுப்பர்.

இகத்தினன் கொடைப்பெருமையையறிந்துளோரில்லென்
றகத்தினுமமுமுரைசெயாரவரரிதாகத்
தொகுத்தவோர் பொருணல்குவரென்பதென் றுணிந்து
மிகுத்தவாவியுங்கொடுப்பரால்வேண்டுமுன்விரும்பி. (14)

(அ-ம்) இகம் - இவ்வுலகம்; அகம் - வீடு; தொகு - (தேடிச்) சேர்.

(உரை) இகத்தில் - இவ்வுலகில்; நல் - சிறந்த; கொடைப் பெருமையை அறிந்துளோர் — ; அகத்தின் நாமும் - வீட்டின் பெயரைச் சொல்ல வேண்டிவரினும்; "இல்" என்று உரையார் —; அவர் - அத்தகையோர்; அரிது ஆக தொகுத்த - அருமையாகத் தேடிச்சேர்த்த ஓர் பொருள் நல்குவர் என்பது - எந்தப்பொருளும் இரப்போர்க் கீவர் என்று கூறவேண்டியது; என் - எதற்காக? மிகுத்த ஆவியும் - எவற்றினும் சிறந்த தம் உயிரையும்; வேண்டுமுன் - கேட்குமுன் (குறிப்பறிந்தே); துணிந்து விரும்பி கொடுப்பர் - பின்வாங்காமல் மெய் அன்போடும் தந்துவிடுவார்கள்.

நைமிசாரணியவாசிகள் கௌதம முனியைச் சிவபிரானது திருவருளைப் பெற மார்க்கம் வினவியபோது அவர் "தானமே சிறந்தது" என்று உபதேசித்த சந்தர்ப்பத்திற் கூறியது இது. புறாவுக்காக உடலை ஈய உடன்பட்ட சிபிசக்ரவர்த்தியும், இந்திரனுக்குத் தன் முதுகெலும்பைத் தந்த ததீசி முனிவனும், பெருந்தலைச் சாத்தர்க்குத் தலையையே தர முன்வந்த குமண வள்ளலும் இத்தகைய பரம உபகாரிகளாவர்.

ஆவியும் - உம் உயர்வு சிறப்பு; நாமமும் - உம் இழிவு சிறப்பு. இகம் X பரம்.

தானம்பெற அருகரல்லாதவர்.

முகனெதிரொன் றும்பிரியின் மற்றொன் றுமொழிபவர்விழைவுறு
தூத, ரகன்றகேள்வியிலா ரருமருத்துவர்களரும்பொருள்கவருநர்
தூர்த்தர், புகலருந்தீமைபுரிபவர்மல்லர்செருக்கினர்புன்றொழிற்றீ
யோர், ரிகழ்தருமினையோரொன்பதுபெயர்க்குமீந்திடல்பழுதென
விசைப்பார். (15)

(அ - ம்) முகன் - முகம்; விழைவு - ஆசை; கவருநர் - அபகரிப்போர்; தூர்த்தர் - வஞ்சகர்; மல் - வளமை, புல் - அற்பமான; இசை - சொல்; இனையோர் - இப்பேர்ப்பட்டவர்.

(உரை) முகன் எதிர் ஒன்றும்—; ஒருவரைக் கண்டபொழுது அவர்கள் முன்னிலையில் ஒரு பேச்சும்; பிரியின் மற்று ஒன்றும் - அவர் பிரிந்து சென்றதும் முன் சொன்னதற்கு முற்றிலும் விரோதமான பேச்சும், மொழிபவர் - சொல்பவர் (ஆகிய புறங்கூறுவோர்); விழைவுறு தூதர் - பணத்தாசையுள்ள தூதர்; அகன்ற கேள்வி இலார் - பரந்த நூற்கேள்வி இல்லாதாராகிய; அரு மருத்துவர் - அரிய மருந்தைக் கொடுத்தற்குரிய வைத்தியர்; அரு பொருள் கவருநர் - பாடுபட்டுப்பிறர்தேடிய பொருளை அபகரிப்போர்; தூர்த்தர் - காமுகர்; புகல் அரு தீமை புரிவர்—; மல்லர் - (செல்வம், பலம்) முதலிய வளங்கள் படைத்தோர்; செருக்கினர் - அகங்காரிகள்; புல் தொழில் தீயோர் - இழி தொழிலுடைய கொடியோர்; இகழ்தரும் இனையோர் - ஆக நிந்திக்கத்தக்க இத்தகைய; ஒன்பது பெயர்க்கும்—; ஈந்திடல் பழுது—; என - என்று; இசைப்பர்—அறிஞர் கூறுவர்.

முருகக்கடவுள் அகஸ்திய முனிவர்க்கு வர்ணாசிரம தர்மங்களைக் கூறுகையில் இது கூறப்பட்டது.

பணத்தாசையுள்ள தூதர், எதிரிபாற் பணம் பெற்று நம்பிக்கை மோசம் செய்துவிடக்கூடும். போலி வைத்தியரால் நோய் தீராததுடன் மகத்தான உயிர்ச்சேதமும் நேரும். காமுகர் காமத்தால் தீய வழியில் நடப்பவராதலின் பல பொல்லாங்குகளுக்கும் புலை நரகுக்கும் ஏதுவாய் நிற்பவர். செல்வவான்களுக்குப் பணம் தரல் மிகை; பலவான்களோ தம் முயற்சியாலேயே தம்மை மட்டுமேயன்றிப் பிறரையும் காக்கவேண்டியவர்கள்; மருந்து நோயாளிக்கே கொடுபட வேண்டும். நோயில்லார்க்குத்தருதல் வீணான காரியமாவதுடன் கெடுதலுக்கும் காரணமாம். அவ்வாறே பொருள்

"ஆதரவற்ற தாழ்நிலையினர்க்கும் ஆக்கையில் வலிமை யில்லார்க்கு"மே கொடுபடவேண்டும். புறங்கூறுவோர், தீமை புரிவோர், செருக்கினர், புன்றொழில் புரிவோர், பொருள் கவருநர்—இயற்கையிலேயே துஷ்ட சுபாவமுள்ள இவர்கள் பணமும் பெற்று விடின் அதனைக் "குரங்கின்கைக் கொள்ளி போல்" உபயோகப்படுத்திப் பழிபாவங்கள் பலசெய்யப் பின்னிடார். ஆதலின் இவ்வொன்பது பகுப்பினரும் தானம் பெறத்தக்கவரல்லராயினர்.

இனி, "மல்லர்" என்பதற்கு "மல்ல யுத்தம் செய்வோர்" எனப் பொருள் கொண்டு, "மல்ல யுத்தம் செய்வோர் உயிர்க்கொலை செய்வோர் ஆதலின், அவர்களுக்கு ஈதல் தீது" எனக் காரணம் கூறுவோருமுண்டு. நிற்க. "அகன்ற கேள்வியிலார் அருமருத்துவர்கள்; அரும்பொருள் கவருநர்;" என்று பிரித்தற்குப் பதிலாக "அகன்ற கேள்வியிலார்; அரு மருத்துவர்கள் அரும்பொருள் கவருநர்" எனப்பிரித்து, பரந்த நூற்கேள்வியில்லாதவர்; அரிய வைத்தியத்திற் கைதேர்ந்தவர்களாய் அரும் பொருள்களை அந்யாயமாகப் பெறுவோர்" என்றும் பொருள் கொள்ளல் ஆகும். பணத்தாசை கொண்ட வைத்தியர் தாம் எதிர்பார்க்கும் பணம் கிடையாவிடின் தம் உபேக்ஷையாலும் உலோபத்தாலும் உயிர்க்குத் தீங்கு விளைக்கக் கூடுமாதலின் அவர்கள் தானம் பெறத் தகாதார் என்க.

முகன் - முகம் என்பதன் போலி. மருத்துவர் - மருந்தின் குணமறிந்து ஈவோர்; கவருநர் - கவர் பகுதி; உ சாரியை; ந் பெயர் இடைநிலை. இனையோர் - இ பகுதி; ன் ஐ சாரியைகள்; ய் சந்தி; ஆர் விகுதி 'ஆ' 'ஓ' ஆனது விகாரம். (செயயுளாதலின்.)

தான பாத்திரர்.

மாண்புடையாளர்கேண்மையர்தத்தம்வழிமுறையொழுக்கினில
மர்ந்தோர், சேண்படுநிரப்பினெய்தினோர்புரப்போர்தீர்ந்தவர்தந்தை
தாய்குரவர், காண்டகுமுதவிபுரிந்துளோரினையோரொன்பதின்மரு
ளுளங்களிப்ப, வேண்டுறுநிதியமளிப்பின்மற்றொன்றேகோடியாமெ
னமறைவிளம்பும். (16)

(அ - ம்) மாண்பு - சிறப்பு; சேண் - மிகுதி; நிரப்பு - வறுமை; புரா - கா; தீர் - நீங்கு; மறை - வேதம்.

(உரை) மாண்பு உடையாளர் - பெருங்குணமுடையோர்; கேண்மையர் - சிநேகர்; தம் தம்—; வழிமுறை ஒழுக்கினில் அமர்ந்தோர் - வருணாசிரம தருமங்களில் வழுவாது நிற்போர்; சேண்படு - மிகுந்த; நிரப்பின் எய்

இரேனோர் - வறுமையால் யாசகார்த்தமாக வந்தவர்கள்; புரப்போர் தீர்ந்தவர் - அநாதையர்; தந்தை தாய்—; குரவர் - ஆசாரியர்; காண்தகும் உதவி புரிந்துளோர் - பிரத்யக்ஷமாக உதவி செய்துளோர்; இனையர் ஒன்பதின்மரும் உளம் களிப்ப - ஆக இத்தகைய ஒன்பது பேர்களும் மனம் சந்தோஷிக்க; வேண்டுறுநிதியம் அளிப்பின் - இவர்களுக்கு வேண்டிய பொருளைத் தரின்; ஒன்றே கோடி - ஈந்த ஒவ்வொன்றும் கோடி வீதம், ஆம் என - பயனைத் தருவதாகும் என; மறை விளம்பும் - வேதம் கூறும்.

இதுவும் அகஸ்தியர்க்கு முருகக் கடவுள் கூறியதே. இச்செய்யுளின் கருத்தை "உறக்கும் துணையதோர் ஆலம் வித்து ஈண்டி, இறப்ப நிழற்பயந்தா அங்கு - அறப்பயனுந் - தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்து விடும்." என்பதைக்கொண்டு அறிக.

சேண்மையர் - யோகக்ஷேமம் கேட்பவர்; சிநேகர். ஒழுக்கு, நிரப்பு - முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள். வறுமையை 'நிரப்பு' (நிறைவு) என்றது எதிர்மறை இலக்கணை. ஒன்பதின்மர் - ஒன்பது பகுதி; இன் - சாரியை; ம் பெயர் இடைநிலை; அர் விகுதி. நிதியம் - அம் சாரியை.

பகவற்கீதை.

சாத்துவிக தானம்.

*முன்செய்காரியப்பொருட்டுமின்றியேமுடித்திதனாற்
பின்பொருநற்பொருள்விளையுமென்பதுவும்பேணுதே
நன்குடையகாலத்தேநல்லிடத்தேநல்லவர்க்குத்
தன்பொருளைகொடுக்குமதுசாத்துவிகதானமே. (17)

(உரை) முன்செய் - பிறர் முன்னால் செய்த; காரியப்பொருட்டு இன்றியே - உதவியின் நிமித்தமும் இல்லாமல்; முடித்து - தானத்தைச் செய்து முடித்து, இதனால் - இத்தானத்தினால்; பின்பு ஒரு நல்பொருள் விளையும் - இனி ஒப்பற்ற நற்பயன் சித்திக்கும்; என்பதுவும் பேணுதே - என்பதையும் விரும்பாமல்; நன்கு உடைய காலத்தே - உத்தம காலத்தே; நல் இடத்தே—; நல்லவர்க்கு—; தன் பொருளைக்கொடுக்கும் அது - தன் பொருளைத் தருவதுவே; சாத்துவிகதானம்—;

சாத்துவிகமாவது - அருள், ஐம்பொறி அடக்கல், ஞானம், தவம், பொறை, மேன்மை, மோனம், வாய்மை என்னும் எண் குணங்களும் ஆகும்.

இராஜஸ தானம்.

*கொண்டுசெயத்தகுங்கருமமெனுங்குறிப்பொன்றின்றியே
பண்டுசிலர்செய்ததற்காப்பரிவோடுபண்ணினவு
முண்டிதனான்மேல்விளைவென்றுணர்வோடிச்செய்வனவு
மெண்டிசையுநிறைபுகழாயிராசதமாந்தானமே (18)

(அ - ம்) குறிப்பு - கருத்து; பரிவு - அன்பு; உணர்வு - அறிவு;

(உரை) எண் திசையும் நிறை - எட்டுத் திக்குகளிலும் நிறைந்த; புகழாய்! புகழ்கொண்ட அர்ச்சுனா!; கொண்டு செயத்தகும் கருமம் - இது மேற்கொண்டு அவசியம் செய்யத்தக்க காரியம் எனும் குறிப்பு ஒன்று இன்றி - என்ற எண்ணமேதுமில்லாமல்; பண்டு சிலர் செய்ததற்கா - முன்பு (ஒருகாலத்தில்) சிலர் தமக்கு உபகாரம் செய்ததற்குப் பிரதியாக; பரிவோடு பண்ணினவும் - அன்போடு செய்தனவும்; இதனால் - இத்தானத்தால், மேல் விளைவு உண்டு - பிரதிப்பிரயோசனம் உண்டு; என்ற உணர்வு நாடிச்செய்வனவும் - என்ற பிரக்ஞையுடன் செய்வனவும்; இராசதம் ஆம் தானம் - ராஜஸதானம் ஆகும்.

இராஜஸம் - ஊக்கம், ஞானம், வீரம், தருமம், கல்வி, கேள்வி முதலியன இதனுள் அடங்கும். "பண்டு சிலர் செய்ததற்கா" என்பதற்கு "முன் சிலர் செய்தகாரணத்தால்", என்றும், "மேல் விளைவு" என்பதற்கு "மறுமைப்பயன்" என்றும் பொருள் கொள்ளலாம். இராசதம் - ராஜஸம் என்பதன் திரிபு. எண்திசை = எட்டு + திசை: ஈறுகெட்டு டகரம் ணகரம் ஆயிற்று. செய்ததற்கா = செய்ததற்கு + ஆக. ஆக என்பதன் ஈறு தொக்கது.

தாமஸதானம்.

*வாயாதவொருபொருளைவழங்காதகாலத்தே
யேயாதசிலத்திடையேயிழிந்தகுலத்தவர்களுக்கே
யாயாதவறிவினோடுமப்பிரியத்தொடுங்கொடுத்தல்
சாயாதபெருந்திறலோய்தாமதமாந்தானமே. (19)

(அ - ம்) வாய் - கிடை; எய் - பொருந்து ஆய் - ஆராய்; அப்பிரியம் - பிரியமின்மை; சாயாத - அழியாத; திறல் - வலிமை;

சாயாத பெரு திறலோய் - அழியாத மிகுந்த வலிமை படைத்த அர்ச்சுனா!; வாயதது ஒரு பொருளை - (நியாய வழியிற்) கிடையாததாகிய ஒருபொருளை; வழங்காத காலத்தே - கொடுக்கத்தகாத காலத்தே; எய்யாத

நிலத்திடையே - பொருந்தாத இடத்திலே; இழிந்த குலத்தவர்களுக்கே - ஈனர்க்கே (அபாத்திரர்க்கே); ஆயாத அறிவினோடும் - அவிவிவேகத்தோடும்; அப்பிரியத்தோடும் கொடுத்தல்—; தாமதம் ஆம் தானம் - தாமஸ தானமாகும்.

தாமதம் - தாமஸம் என்பதன் திரிபு. தாமஸம் - ஒழுக்கவழு, காமம் கொலை, கோபம், சோம்பல், நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி முதலியன.

பட்டினத்தடிகள் பாடல்.

உலோபிகளின் உபயோகமின்மை.

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைபிறந்துமண்மே
லிறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ்சிவன்றந்ததென்றுகொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே. (20)

கச்சி ஏகம்பனே! —காஞ்சிபுரத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரேசனே! பிறக்கும்பொழுது—; கொடு வந்தது கொண்டுவந்த செல்வம் ஏதும்; இல்லை—; மண்மேல் பிறந்து இறக்கும் பொழுது—; கொடுபோவது - கூட எடுத்துச் செல்வது ஏதும்; இல்லை—; இடைநடுவில் - பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவில் (அதாவது உயிர்வாழும் காலத்தில்) குறிக்கும் - தோன்றுகிற; இ செல்வம் சிவன் தந்தது என்று—; கொடுக்க அறியாது இறக்கும்—; குலாமருக்கு - பாமரருக்கு; என் சொல்லுவேன்—;

கொடு - கொண்டு என்பதன் விகாரம். இடைநடு - ஒருபொருட்பன்மொழி; கொடுக்கறியாது=கொடுக்க+அறியாது - ஈறுதொக்கது. கச்சி காஞ்சி என்பதன் சிதைவு. ஏகாம்ரம் என்ற வடமொழி ஏகம்பம் எனத் திரிந்தது. ஏகம்=ஒன்று. ஆம்ரம்=மாமரம். ஆகவே ஏகாம்ரன் ஒப்பற்ற மாமரத்தடியில் அங்கு வீற்றிருக்கும் சிவன்.

உலோபிகள் நாயினும் கடையர்.

நாயாய்ப்பிறந்திடினல்வேட்டையாடிநயம்புரியுந்
தாயார்வயிற்றினராய்ப்பிறந்துபின்சம்பன்னராய்க்
காயாமரமும்வறளாங்குளமுங்கல்லாவுமென்ன
வீயாமனிதரையேன்படைத்தாய்கச்சியேகம்பனே. (21)

(அ - ம்) நரர் - மனிதர்; சம்பன்னர் - நிறைந்தவர். வறள் - வற்று;

(உரை) கச்சி ஏகம்பனே —; நாயாய் பிறந்திடின் - (ஈனமிக்க)நாய் ஜன்மம் எடுப்பினும்; நல்வேட்டையாடி —; நயம்புரியும் - தன்னை வளர்த்தவனுக்கு நன்மை செய்யும்; (அவ்வாறுமின்றி) தாயார் வயிற்றில் நாராய்ப் பிறந்து —; பின் சம்பன்னராய் - பின்பு (செல்வம்) நிறைந்தவராகி; காயா மரமும் —; வறள் ஆம் குளமும் - நீர் வற்றிய குளமும்; கல் ஆவும் என்ன - கல்லினால் ஆகிய பசுவும்போல, ஈயா - (பிறர்க்கு எப்பயனும்) தராத; மனிதரை என் படைத்தாய்? —;

தாயார் - இதில் ஆர் மரியாதைப் பன்மை விகுதி - பலர்பால் விகுதியும் ஆம். நாராய்ப்பிறந்து என்பதோடு நில்லாது, "தாயார் வயிற்றில் நாராய்ப்பிறந்து" என்பது, இவர் பிறப்பால், தாய் வயிறும் இகழப்படும் என்பதை உணர்த்தற்பொருட்டு என்க. காயா, ஈயா ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்.

117477

ஈயாமைக்கிரங்கி மனத்தோடு கூறல்.

முற்றொடர்பிற்செய்தமுறைமையால்வந்தசெல்வ
மிற்றைநாட்பெற்றோமென்றெண்ணுதுபாழ்மனமே
யற்றவர்க்குமீயாமலரன்பூசைபோராமற்
கற்றவர்க்குமீயாமற்கண்மறந்துவிட்டனையே. (22)

(அ-ம்) தொடர்பு - பிறப்பு. கண் - கண்ணோட்டம்: தாக்ஷிண்யம்

(உரை) பாழ் மனமே! —; வந்த செல்வம் - கைக்கு வந்த செல்வத்தை; முன் தொடர்பின் செய்த முறைமையால் — முற்பிறப்பிற் செய்த நல்வினைத் தொடர்பால்; இற்றைநாள் பெற்றோம் என்று எண்ணாது —; அற்றவர்க்கும் ஈயாமல் - (அதனைப் பொருள்) இல்லாதார்க்குக்கொடாமலும்; அரன்பூஜை ஓராமல் - (அச்செல்வத்தால்) சிவபூஜையை நினைந்து செய்யாமலும், கற்றவர்க்கும் ஈயாமல் —; கண் மறந்து விட்டனையே - கண்ணோட்டத்தை மறந்துவிட்டாயே.

வறிஞர்க்கும் அறிஞர்க்கும் வழங்கலும், சிவபூஜைக்குச் செலவிடலுமே செல்வம் படைத்ததன் பயன் என்பது இச்செய்யுளால் அறியத்தக்கது. பெற்றோம் - தனித் தன்மைப் பன்மை. கண் - ஆகுபெயர். அரன், பூசை - இவை முறையே ஹரன், பூஜா என்பவற்றின் திரிபு. ஹரன் = அழிப்பவன்.

இனி கண் என்பதை ஞானக்கண் எனக்கொண்டு, கண்மயங்கி என்பதற்கு "மதி மயங்கி" எனவும் பொருள் கொள்ளலாம்.

நன்னெறி.

ஈவார்மேல் நிற்கும் புகழ்.

பிறர்க்குதவிசெய்யார்பெருஞ்செல்வம்வேறு
பிறர்க்குதவியாக்குபவர்பேறும்—பிறர்க்குதவி
செய்யாக்கருங்கடனீர்சென்றுபுயன்முகந்து
பெய்யாக்கொடுக்கும்பிறர்க்கு. (23)

(அ - ம்) பேறு - செல்வம்; புயல் - மேகம்; பெய்யா - பெய்து.

(உரை) பிறக்கு உதவி—; செய்யார் - செய்யாதவருடைய; பெருசெல்வம்—; வேறு - வேறுதான் என்றாலும் (அது); பிறர்க்கு உதவி ஆக்குபவர்—; பேறும் - செல்வமே ஆகும். (எதுபோல என்னின்) பிறருக்கு உதவி செய்யா—; கருகடல் நீர் - கரிய சமுத்திர நீரை; புயல் - மேகம்; சென்று முகந்து - போய் மொண்டு; பெய்யா பிறர்க்குக் கொடுக்கும் - (மழையாகப்) பெய்து பிறர்க்கு உதவும்.

கடல் சேர்த்து வைத்துள்ள நீர் உவர் சம்பந்தமான நீராதலின் எவர்க்கும் குடிநீராகப் பயன்படுவதில்லை. அதனையே மேகம் மொண்டு சென்று நன்னீராக வருஷித்து உலகைக் காக்கும்போது மேகத்தை நாம் கொண்டாடுகிறோமேயன்றி அதனை ஆதியிற் சேர்த்துவைத்திருந்த கடலைப் புகழ்வதில்லை. இங்ஙனமே பாடுபட்டுச் சேர்த்த ஒருவனுடைய செல்வம் அவனது உலோபகுணம் காரணமாகப் பிறர்க்குப் பயன் படாதிருக்க, அச்செல்வத்தையே பிறர் எடுத்துத் தம் ஈகைக்குணத்தால் பிறர்க்குதவி புரியின் அப்பொருள், அவ்வாறு ஈவோனது பொருளாகவே கருதப்படும். அன்றியும் அதனல் வரும் புகழும் புண்ணியமும் ஈவானையே அடையும் என்பது இச்செய்யுளின் தாற்பரியம். இப்பாட்டில் முன்னையது உபமேயம். பின்னையது உபமானம் இவ்விரண்டுக்கும் இடையில் உவம உருபு வருவிக்கப்பட்டதைக் கவனிக்க. ஆதலின் இது எடுத்துக்காட்டு உவமை அணி.

பேறு - முதல் நீண்ட தொழிற்பெயர். செய்யா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; பெய்யா - 'செய்யா' என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு இறந்த கால வினையெச்சம்.

ஈதல் காரணமாக இறக்கவரினும் அதனைக் கைவிடாமை.

எந்தைநல்கூர்ந்தானிரப்பார்க்கீந்தென்றவன்
மைந்தர்தம்மீகைமறுப்பரோ—பைந்தொடி

நின்றுபயனுதவிநில்லாவரம்பையின்கீழ்க்
கன்றுமுதவுங்கனி. (24)

(அ - ம்) நல்கூர் - தரித்திரனுகு. இர - யாசி; தொடி - வளையல்; அரம்பை - வாழை.

(உரை) பைந்தொடீ - பசுமையான வளையல் அணிந்தவளே; நின்று - தான் வாழ்ந்து நின்று; பயன் உதவி - (பழமாகிய) பயனைப் பிறர்க்களித்து நில்லா - (அவ்வாறு அளித்ததன் காரணமாக வெட்டுண்டதால்) நில்லாத; அரம்பையின் கீழ்க்கன்றும் - வாழையின் கீழ் உள்ள அதன் கன்றுகளும்; கனி உதவும் - பழம் தரும். (அதுபோல) எந்தை - எங்கள் தந்தை; இரப்பார்க்கு ஈந்து—; நல்கூர்ந்தான் - (அதனால்) தரித்திரனான்; என்று அவன் மைந்தர்—; தம் ஈகை மறுப்பரோ - தாம் பிறர்க்குக் கொடுத்தலை விட்டு விடுவார்களோ? (விடார்)

இதுவும் எடுத்துக்காட்டு உவமை அணி. பைந்தொடீ - மகடூஉமுன்னிலை. அதாவது பெண்ணை முன்னிலைப்படுத்திக்கூறுவது - ஆணை முன்னிலைப்படுத்திக்கூறுவது ஆடூஉ முன்னிலை. பைந்தொடி - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. அரம்பை - "ரம்பா" என்பதன் திரிபு; நின்று, நில்லா - தொடை முரண்.

நீதிநெறிவிளக்கம்.

உலோபத்தினும் ஏழைமை உத்தமம்.

வள்ளன்மையில்லாதான்செல்வத்தின்மற்றையோ
னல்குரவேபோலுநனிநல்ல—கொன்னே
யருளிலனன்பிலன்கண்ணறையனென்று
பலராலிகழப்படான். (25)

(அ - ம்) வள்ளன்மை - ஈகைக்குணம்; நல்குரவு - தரித்திரம். கொன்னே - அகாரணமாக; கண் - தாக்ஷண்யம் அறையன் - அறுதலையுடையவன்:

(உரை) வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் - உதாரகுணம் இல்லாதவனுடைய செல்வத்தினும்; மற்றையோன் - உதாரனுடைய; நல்குரவே நனிநல்ல - வறுமையே மிகவும் நல்லதாகும். (ஏனெனில், அப்பொருள் இல்லாதவன்), அருள் இலன் - கருணையற்றவன்; அன்பு இலன் - அன்பு இல்லாதவன்; கண் அறையன் - தாட்சண்யம் இல்லாதவன்; என்று பலரால்—; கொன்னே இகழப்பட்டான் - காரணமின்றி நிந்திக்கப்படமாட்டான். (போலும் - உரையசை).

கூறும் விஷயத்தைக் காரணங்காட்டி விளக்கலால் இது ஏது அணி (ஏது - காரணம்.)

அன்பு—சம்பந்தமுடையாரிடத்துள்ள பற்று. அருள் - சம்பந்தமில்லாதாரிடத்துள்ள பற்று. வள்ளன்மை - வள் பகுதி, அல் சாரியை, மை பண்புப்பெயர் விகுதி. செல்வத்தின் - இதில் 'இன்' எல்லைப்பொருளில் வந்தது. நல்ல - நல்லது என்பதன் விகாரம். கொன்னே=கொன்+ஏ. கொன் - இடைச்சொல்; ஏ - அசை.

இராமாயணம்.

ஏற்றலின் இழிவும் ஈகையின் உயர்வும்.

வெள்ளியையாதல்விளம்பினையேலோர்
வள்ளியராகவழங்குவதல்லா
லெள்ளுவவென்சிலவின்னுயிரேனுங்
கொள்ளுதறீதுகொடுப்பதுநன்றால். (26)

(அ - ம்) வள்ளியர் - வரையாது ஈவோர்; எள் - இகழ்.

(உரை) வெள்ளியை ஆதல் - (நீ) வெள்ளி யாதலின்; விளம்பினை - இங்ஙனம் உரைத்தாய்; மேலோர்—; வள்ளியர் ஆக - வரையாது கொடுப்பேராக; வழங்குவதல்லால் - (இரப்போர்க்கு) ஈவதேயன்றி; எள்ளுவ (ஈயத்தகாதன என்று) இகழப்பட்டனவாகிய; சில என் - சில பொருள்கள் எவை? (எவையும் இல்லை); இன் உயிர் எனும் - தனது இனிய உயிரையேனும்; கொள்ளுதல் தீது - இரந்து பெறுதல் துன்பம் தருவதாகும்; கொடுப்பது - (அவ்வுயிரையே இரந்தோர்க்கு) ஈவது; நன்று - இன்பந்தருவதாகும்.

மகாபலி என்ற அசுர சக்ரவர்த்தி திரிலோகங்களையும் ஜயித்து அவற்றின் அதிபதியானான். அரசிழந்த தேவர்களின் வேண்டுகோளால் விஷ்ணு குறளுருக்கொண்டு மாபலிபாற் சென்று மூவடிமண் வேண்டினர். தருமவீரனாகிய அவன் அது கொடுக்க இசைந்தகாலை, அவனது குருவாகிய சுக்கிராசாரி குறுக்கிட்டு, இரந்து வந்தவன் திருமால் என்றும், ஆதலின் அவன் தர இசையின் அவனுக்குத் தீங்கு நேரிடும் என்றும் எச்சரித்தான். அப்பொழுது சுக்கிரனை நோக்கிப் பலிகூறியது இது.

வெள்ளியை - 'அறிவீனன் நீ' எனவும் பொருள் கொள்ளல் ஆம்: சுக்கிரன், அறிவீனன் என்ற இருபொருளும் கொண்டது வெள்ளி. சிலேஷையாக இங்கது அமைந்ததை நோக்குக. வெள்ளியை-முன்னிலை ஒருமைக்

குறிப்பு வினையால் அணையும் பெயர். வள்ளியர் - இதில் வண்மை என்னும் பண்பின் அடியாகப் பிறந்த வள் - பகுதி, இ - சாரியை, ய் - சந்தி, அர் - விகுதி.

"கொள்ளுதல் தீது; கொடுத்தல் நன்று"—இதனோடு நல்லாறெனி னும் கொளல் தீது மேலுலகம், இல்லெனினும் ஈதலே நன்று" என்ற குறள் கருத்தையும் உய்த்துணர்க.

இதுவும் அது.

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்தியகை கொடிரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனு
மீந்தவ ரல்ல திருந்தவர் யாரே. (27)

(உரை) எந்தாய்! - எமது தந்தை போல்பவனே!; மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்கள்—; (பின்னை இறந்தோர் யாவர் என்னில்) மாயாது - பிராணனை விடாமல்; ஏந்திய கை கொடு இரந்தவர் - கையேந்தி யாசித்தவரே; வீந்தவர் என்பவர் வீந்தவரேனும் - இறந்தோர் எனப்படுவோர் இறந்தவரேயாயினும், ஈந்தவர் அல்லது இருந்தவர் யாரே? - கொடையாளிகளைத் தவிர உலகில் [illegible]யாய் நிற்போர் யாவர்? (எவரும் இல்லை.)

இதுவும் பலி சுக்கிரனை நோக்கிக் கூறியதே. இரந்தோர் இருந்தும் இறந்தோரே; ஈந்தோர் இறந்தும் இருப்போரே - என்பது இதன் கருத்து.

அல்லர்கள் - இதில் கள் - விகுதிமேல் விகுதி. என்பவர் செயப்பாட்டுப் பொருளில் வந்த செய்வினை.

குசேலோபாக்யாநம்.

லோபிகட்குச் செல்வத்தாலாய பயன் இல்லை.

ஒருசிறு தருமமேனு முஞற்றிடா ரிரப்போர் வந்து
தருநிகர் கரத்தாயென்று சாற்றினுங் கொள்ளா ராகிக்
கருணைசற் றின்றி யில்லை கடந்திடத் துறந்து மீள்வார்
மருவுபல் கிளையு மோம்பார் வளம்படைத் தென் பெற்றாரால். (28)

(அ-ம்) உஞற்று - செய்; தரு - கல்பக விருக்ஷம்; மருவு - சேர் ஓம்பு - பாதுகா; வளம் - செல்வமிகுதி.

(உரை) ஒரு சிறு தருமமேனும்—; உஞற்றிடார் - (உலோபிகள்) செய்யார்; இரப்போர் வந்து—; தருநிகர் கரத்தாய் - கற்பக விருக்ஷம் போன்ற

கையுடையாய்; என்று—; சாற்றினும் - புகழ்ந்தாலும்; கருணை சற்று இன்றி—; எல்லை கடந்திட துறந்து மீள்வர் - அவ்விரப்போரைத் (தம் வீட்டின்) எல்லைக்கப்பால் செலவிட்டுத் திரும்புவர்; மருவுபல் கிளையும் ஓம்பார் - தமைச் சேர்ந்த பல சுற்றத்தாரையும் காவார்; (இன்னோர்) வளம் படைத்து என் பெற்றார் - மிகுந்த செல்வம் பெற்று எப்பயன் அடைந்தனர்? (ஏதுமில்லை)

27-மக்களைப் பெற்று வறுமைப் பிணியால் வருந்திய நல்லோனை குசேலனை நோக்கி அவன் மனைவி அவனது உயிர் நண்பனைக் கண்ணன் பாற் சென்று செல்வம் பெற்றுவருமாறு சொல்லியபோது, செல்வத்தியலை இழித்துக்கூறுகிற சந்தர்ப்பத்தில் இது அவன் அவளுக்குக் கூறியது.

ஐந்தருக்கள் - சந்தானம், அரிசந்தனம், மந்தாரம் பாரிஜாதம், கல்பகம். சாற்றினும்:— இதில் உம் உயர்வு சிறப்பு. கிளை - உவமையாகுபெயர்.

புறநானூறு.

இரப்போரின் தராதரம் அறிந்து ஈதல்

ஒருதிசையொருவனையுள்ளிநாற்றிசைப்
பலரும்வருவர்பரிசின்மாக்கள்
வரிசையறிதலோவரிதேபெரிது
ஈதலெளிதேமாவண்டோன்ற
லதுநன்கறிந்தனையாயிற்
பொதுநோக்கொழிமதிபுலவர்மாட்டே. (29)

(அ-ம்) உள் - நினை; பரிசில் வெகுமதி, யாசகம்; வரிசை - தன்மை: தாரதம்மியம்; தோன்றல் - அரசன்; புலமை - அறிவு; அதனையுடையோர் புலவர்: வித்வான்கள்; மாடு - இடம்.

(உரை) மா வண் தோன்றல் - மிக்க ஈகைக்குணம் வாய்ந்த அரசனே! ஒருதிசை ஒருவனை உள்ளி - ஓரிடத்துள்ள தருமவான் ஒருவனிடம் செல்ல நினைந்து; நால் திசை பலரும் வருவர் - நான்கு திக்குகளிலிருந்தும் பலபேர்கள் யாசகார்த்தமாக வருவர்; பரிசில் மாக்கள் வரிசை அறிதல் - அவ்யாசகரின் தாரதம்மியம் அறிதல்; அரிது - அருமையான காரியம், ஈதல் - அவர்கள் வேண்டியவை ஈவதோ; எளிது -(நின் போன்ற ஈகையாளர்க்கு) எளிது; அது நன்கு அறிந்தனை ஆயின் - (முன் சொல்லிய) அத்தாரதம்மியத்தை நன்றாக நீ அறியின்; புலவர் மாட்டு - வித்வான்களிடத்தில்; பொது நோக்கு ஒழி - ஒரே விதமாகப் பார்த்தலை நீக்குவாயாக (அதாவது, தாரதம் கருதியே இவர்கள் தகுதிக்குத் தக்கவாறு ஈவாயாக.) (மதி - அசை)

இது கபிலர் என்னும் புலவர் மலையமான் திருமுடிக் காரி என்னும் வள்ளலை நோக்கிக் கூறியது.

திணை: பொது வியல் (பொதுவாயுள்ள விஷயங்களைக் கூறுவது.) துறை,—பொருள் மொழிக்காஞ்சி (அதாவது இருமையிலும் நன்மை தரும் பொருளை அறிஞர் கூறுவது.) திசை - திசா என்பதன் திரிபு. பலரும் - உம் முற்று. தோன்றல் - சிறந்து தோன்றல்; இங்கு அது தொழிலாகு பெயர்; அண்மை விளி யாதலின் இயல்பாயிற்று. நோக்கு - முதனிலைத் தொழிற் பெயர். மாட்டு - ஏழனுருபு.

ஈவாரே என்றும் உள்ளோர்.

மன்னுவுலகத்துமன்னுதல்குறித்தோர்
தம்புகழ்நிறீஇத்தாமாய்ந்தனரே
துன்னருஞ்சிறப்பினுயர்ந்தசெல்வ
ரின்மையினிரப்போர்க்கீஇயாமையிற்
றொன்மைமாக்களிற்றொடர்பறியலரே. (30)

(அ-ம்) மன்னு - நிலைபெறு; நிறீஇ - நிறுத்தி; துன்னு - அடை; இன்மை - வறுமை; தொன்மை - பழமை. தொடர்பு - பின்பற்றுதல்.

(உரை) மன்னு உலகத்து - எப்பொருளும் நிலையாத இவ்வுலகிலே; மன்னுதல் குறித்தோர் - நிலைக்கக் கருதியோர்; தம்புகழ் நிறீஇ - தம்புகழை (ஈகையால்) நிலைநிறுத்தி; தாம் மாய்ந்தனர்—; துன் அரு - அடைதற்கரிய; சிறப்பின் - சிறப்பினையுடைய; உயர்ந்த செல்வர்—; இன்மையின் இரப்போர்க்கு - வறுமையால் யாசிப்போர்க்கு; ஈயாமையின் - கொடாமையினால்; தொன்மை மாக்களின் தொடர்பு - பழைய வள்ளல்களைப்போல உலகைப் பின்பற்றிச் செல்லுதலை (அதாவது புகழ் நிறுத்தித் தாம் நிலைத்தலை) அறியலர் - அறியார்.

குமணவள்ளலை அவன் தம்பி இளங்குமணன் காட்டிற்கு ஓட்டியதோடு, அவனது உயிரை வாங்கவும் கருதி அதற்காவனபுரிந்தான். ஈதிங்ஙனமாக பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் குமணனைக்காட்டிற் கண்டு தம் வறுமையை நீக்குமாறு அவனை வேண்டியபோது, குமணன் அவரை நோக்கி "நீ என்

"தலைதனைக் கொடுபோய் என்றம்பிகைக் கொடுப்பாயாயின்
விலையெனச் செம்பொன்கோடி மிகமகிழ்ந் தீவான்கோடி"

"ஈது நீ புரியின் நின்னை இன்னல் செய் கலியும் வீயும்
ஓதிய எம்பி உள்ளத் தோங்கிய கவலும் நீங்கும்
மேதகு புகழும் மேலாம் வீடும்எய் தும் கண்டாய்
ஆதலின் இதனின் மேலாம் அறமும்ஒன் றில்லை ஐயா"

எனக்கூறித்தன் தலையை வெட்டி யெடுத்துக்கொண்டு செல்ல அவர்கையில் வாளைக்கொடுக்க, அவர் அங்ஙனம் செய்யாமல் அவ்விடம் நீங்கிக், குமணன் தந்த வாளை இளங்குமணனுக்குக் காட்டி, நடந்தனகூறி அவனை நல்வழிப் படுத்துமாறு கூறியது இது.

திணை - பாடாண்திணை (அதாவது ஒருவனுடைய புகழ், வலிமை, கொடை, கருணை முதலியவற்றை அறிந்து கூறல்). துறை - பரிசில் விடை (அதாவது பரிசுபெற வந்தோன் அதனைப் பெற்றாயினும் பெறாதாயினும் ஈவோனை நோக்கிக் கூறும் விடை).

மன்னு - எறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மன்னு - என்பதற்கு "அரசனே!" எனவும் பொருள்கொள்ளலாம்; "மன்னுதல் வேண்டின்" என்றதனாலேயே உலகம் "மன்னாத உலகமே" என அறியத்தக்கதாதலின். நிறீஇ- நிறுவி என்பதன் விகாரம்; இன்னிசை யளபெடை, துன் - முதனிலைத் தொழிற்பெயர்; இன்மையின், ஈயாமையின் - இன் - ஐந்தாம்வேற்றுமை ஏதுப்பொருள். ஈஇயாமையின் - அளபெடை, செய்யுள் ஓசை நிறைக்க வந்தது. மாக்களின் - இன் ஒப்பு; தொடர்பு - தொழிற் பெயர்; சிறப்பின் - இன் சாரியை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் தொக்கது.

தெண்கடல்வளாகம்பொதுமையின்றி
வெண்குடைநிழற்றியவொருமையோர்க்கு
நடுநாள்யாமத்தும்பகலுந்துஞ்சான்
கடுமாப்பார்க்குங்கல்லாவொருவற்கு
முண்பனநாழியுடுப்பனவிரண்டே
பிறவுமெல்லாமோரொக்கும்மே
செல்வத்துப்பயனேயீதல்
துய்ப்பேமெனினேதப்புநபலவே. (31)

[இக்குமணவள்ளலின் அதிஅற்புத சரித்திரத்தைக் கல்மனமும் கரைந்துருக எமது அரும்புலமைப் பெருங்கேண்மைவாய்ந்த ஆப்தரும் மதுரையில் எம்முடன் "வித்யாபாநு"ப் பத்திரிகையை நடத்துவோருமான ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் இனிய எளிய செய்யுள் நடையில் சாமானியருக்கும் பொருள் விளங்கும்படி பாடியிருக்கின்றார். இரண்டாம் பதிப்பு குறிப்புரை முதலியவற்றுடன் சமீபத்தில் வெளியாகி இருக்கிறது. விலை அணா எட்டே. வேண்டுவோர் எமக்காயினும், கவிராயர்க்காயினும் எழுதிப்பெறுக]

(அ - ம்) வளாகம் - வளைந்த இடம்; பொதுமை - உரிமை. நிழற்ற - நிழலைச்செய்; ஒருமை - ஒப்பற்ற தன்மை; யாமம் - இராத்திரி; துஞ்சு - தூங்கு; கடு - விரைவான; மா - விலங்குகள்; துய் - அனுபவி; தப்புந - தவறுதல்கள்.

(உரை) தெள் கடல் வளாகம் - தெளிந்த கடல் நீர் சூழ்ந்த இவ்வுலகினை; பொதுமை இன்றி - தமக்கும்பிறர்க்கும் பொது என்னாது (தமக்கே உரிமையாகக் கொண்டு) வெள் குடை நிழற்றிய - வெண்குடையால் நிழலைச் செய்த; ஒருமையோர்க்கும் - ஒப்பற்ற தன்மையுடையார்க்கும் (ஏகசக்ராதிபதிகளுக்கும்); நாள் நடு யாமத்தும் பகலும் - நாளின் அர்த்த ராத்திரியிலும் பகலிலும்; துஞ்சான் - தூங்காதவனாய்,—கடு மா பார்க்கும் - விரைந்தோடும் விலங்குகளையே குறி வைத்திருக்கும்; கல்லா ஒருவற்கும் - கல்வி இல்லாத ஒருவனுக்கும்; உண்பன நாழி - உணவுப் பொருள் ஒருநாழி தானியமே; உடுப்பன இரண்டே - ஆடைகள் இரண்டே! பிறவும் எல்லாம் - மற்றும் உள்ள (நித்திரை, அச்சம், இன்பம், மகப்பேறு முதலிய) பலவும்; ஓர் ஒக்கும் - ஓரே தன்மையாகும். (ஆதலால்) செல்வத்து பயன் - செல்வம் படைத்தலால் ஆகிய பயன்; ஈதலே - வறியோர்க்குத் தருதலேயாம். துய்ப்போம் எனினே - நாமே அதனை அனுபவிப்போம் என்றாலோ; தப்புந பலவே - தவறுதல்கள் பலவாகும்.

இது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடியது.

திணை - பொதுவியல்; துறை - பொருள்மொழிக்காஞ்சி. வேந்தனாயினும் வேடனாயினும் உண்பது நாழி உடுப்பது நான்கு முழமே. ஆதலின் செல்வமுடையார் எஞ்சிய பொருளை அறநெறியிற் செலவிடுவாராக. அங்ஙனம் செய்யாதார் நாற்பயனும் பெறார் என்பது கருத்து.

யாமம் - ஏழரை நாழிகை; ஆகுபெயராய் இரவைக் குறித்தது. ஒருமையோர்க்கும், ஒருவற்கும் - உம்மைகள் எண்ணுப்பொருளன. கடு - கடி என்பதன் திரிபு. நாழி - முகத்தல் அளவையாகுபெயர். இரண்டு - எண்ணல் அளவை. உடுப்பன இரண்டு - கீழாடையும் மேலாடையும். தப்புந - பலவின்பாற் பெயர். இதில் ந் பெயர் இடைநிலை. ஒக்குமே - ஏ தேற்றம்; ஈதலே - ஏ பிரிநிலையும் தேற்றமும்; எனினே, பலவே - ஏ அசைகள்.

இயலாதன இயலுமென்றலும் இயல்வன இயலாவென்றலும் இழுக்காம்.

*ஒல்லுவதொல்லுமென்றலும்யாவர்க்கு
மொல்லாதில்லெனமறுத்தலுமிரண்டு
மாள்வினைமருங்கிற்கேண்மைப்பாலே
யொல்லாசொல்லுமென்றலுமொல்லுவ

தில்லென மறுத்தலுமிரண்டும்வல்லே
யிரப்போர்வாட்டலன்றியும்புரப்போர்
புகழ்குறைபடூஉம்வாயிலத்தை. (32)

(அ - ம்) ஒல்லுவது - முடிவது; ஆள்வினை - தாளாண்மை: உபகாரம்; மருங்கு - பக்கம், இடம். கேண்மை - நட்பு; பால் - பகுதி; வல்லே - விரைவாக; புர - காப்பாற்று; வாயில் - வழி;

(உரை) ஒல்லுவது ஒல்லும் என்றலும் - தாம் தரக்கூடிய பொருளைத் தரக்கூடும் எனத்தரலும்; ஒல்லாது இல் என மறுத்தலும் - தரக்கூடாததை 'இல்லை' யெனக்கூறி மறுத்தலும் ஆகிய; இரண்டும் —; யாவர்க்கும் —; ஆள்வினை மருங்கின் - உபகாரத்தின் பகுதியாகிய; கேண்மை பாலே - நட்பு லக்ஷணத்தில் அடங்கியவையே யாகும். ஒல்லாது ஒல்லும் என்றலும் - கூடாத காரியத்தைக் கூடும் என்றலும், ஒல்லுவது இல் என மறுத்தலும் - கூடியதை முடியாது என்று மறுத்தலும் ஆகிய இரண்டும்; வல்லே - விரைவினில்; இரப்போர் - யாசிப்பேரை; வாட்டல் அன்றியும் - வருத்துவதோடு, புரப்போர் புகழ் - ஈந்து காப்போர்து புகழானது; குறைபடூஉம் வாயில் - குறைவுபடும் வழியாகும். (அத்தை - அசை.)

இஃது, ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் தமக்குப் பரிசில் தரத் தாமதித்த இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் என்ற பாண்டியனை நோக்கிக் கூறியது.

திணை - பாடாண்திணை. துறை - பரிசில் கடாநிலை. (அதாவது இரப்போரைப் பிரிய மனமின்றி அவர்களுக்குப் பரிசுதரக் காலம் நீட்டித்த காலை ஈவோனை நோக்கி ஏற்போன் தன் சுற்றத்தார் உறும் துன்பம் கூறி தனக்கு வேண்டிய பொருள் இன்னதென்க் கூறுவது.)

செய்யக்கூடிய உதவியைச் செய்யாதிருப்பதும், கூடாததைக் கூடும் என்பதும் தவறு. இவ்விரு காரியங்களாலும் இரப்போர் மனம் வருந்தும். ஈவோர் புகழும் கெடும்" என்பது கருத்து. "இசையா ஒருபொருளை இல், லென்றல் யார்க்கும் வசையன்று வையத்தியற்கை" "செய்க்கடவ அல்லனவும் செய்துமன் என்பார் நயத்தகு நாகரிகம் என்னும்" என்றவற்றின் கருத்தையும் உய்த்துணர்க.

ஒல்லுவது - வினையாலணையும் பெயர்; ஒல்லாது - 'ஒல்லாதது' என்பதன் தொகை. வல்லே - விரைவுக் குறிப்பு உணர்த்தும் இடைச்சொல். படூஉம் - அளபெடை. செய்யுளிசை நிறைக்க வந்தது. மருங்கின் - இன் அசை.

ஈவோரின் உடைமை வறுமைகள் ஏற்போரின் உடைமை வறுமைகள் ஆதல்.

*கடவுளாலத்துத் தடவுச்சினைப்பல்பழ
நெருநலுண்டனமென்னாதுபின்னுஞ்
செலவானாவே கலிகொள்புள்ளின
மனையர்வாழியோவிரவலரவரைப்
புரவெதிர்கொள்ளும்பெருஞ்செய்யாடவ
ருடைமையாகுமவருடைமை
யின்மையாகுமவரின்மையே. (33)

(அ - ம்) தடம் - விசாலம், சினை கிளை; நெருநல் - நேற்று; ஆனா - நீங்கா; கலி - சப்தம்; புரவு - காத்தல்; செய் - செய்கை; ஆடவர் - மனிதர்; இன்மை - இல்லாமை : வறுமை.

(உரை) கலிகொள் புள் இனம் - சப்திக்கின்ற பறவைக்கூட்டம்; கடவுள் ஆலத்து - தெய்விக ஆலமரத்தில் உள்ள; தடம் சினைபல் பழம் - பெரிய கிளைகளில் உள்ள பல பழங்களை; நெருநல் - நேற்று; உண்டனம் என்னாது - தின்றோம் என்னாமல்; பின்னும் —; செலவு ஆனா - போதல் நீங்கா, (போய் அடையும்.) அனையர் இரவலர் - இப்பேர்பட்டவரே இரப்போரும், அவருடைமை - அவ்விரப்போர் செல்வம்; அவரைப் புரவு எதிர்கொள்ளும் - அவரைக் காத்தற்கு ஏற்றுக்கொள்ளும்; பெரும் செய் ஆடவர் - மிக்க செய்கையையுடைய ஆண்மக்களின்; உடைமை - செல்வம் ஆகும். அவர் இன்மை - அவ்விரப்போரின் வறுமை; இன்மை ஆகும் - அவ்வாண்மக்களின் வறுமை ஆகும்.

திணை - பாடாண்திணை; துறை - பரிசில் கடாநிலை. வாழி, ஓ - அசைகள்; தடம் - உரிச்சொல். தடவுச்சினை உ சாரியை; செய் - முதனிலைத் தொழிற்பெயர்; ஆலத்து = ஆல் + அத்து. அத்து - சாரியை. "அண்ணல் யானை அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு மன்னர்க்கிருக்க நிழல் தந்து," பறவையாதிய பல, பழமாதிய உணவு பயிலுமிடமாயிருத்தலின் "கடவுள் ஆல்" என்றார்; அன்றியும் அவை தெய்வங்களின் உறைவிடமாகவும் சிறந்து விளங்குவதாலும் என்க. இரவலர் - இரத்தலில் வல்லவர். தடவு - என்பதே உரிச்சொல் எனவும் கொள்ளலாம்.

பன்முறை பரிசு பெற்றார்க்கும் பரிசு தரல் உடையோர் கடனே.

*கழிந்ததுபொழிந்தெனவான்கண்மாறினுந்
தொல்லதுவிளைந்தெனநிலம்வளங்கரப்பினு
மெல்லாவுயிர்க்குமில்லால் வாழ்க்கை
ன்னுந்தம்மெனவெய்யனோரிரப்பின்.

முன்னுங்கொண்டிரென நம்மனோர்மறுத்த
லின்னாதம்மவியறேரண்ண
லில்லதுநிரப்பலாற்றாதோரினு
முள்ளிவருநர்நசையிழப்போரே
யனையையுமல்லைநீயேயொன்னா
ராரெயிலவர்கட்டாகவுநமதெனப்
பாண்கடனிறுக்கும்வள்ளியோய்
பூண்கடனெந்தைநீயிரவலர்புரவே. (34)

(அ - ம்) இயல் - இயற்று; பொழிந்து - பொழிந்தேன்; வான் - மேகம்; விளைந்து - விளைந்தேன்; தம் - தாரும்; அம்ம - கேள்; இல்லது - வறுமை; நசை - இன்பம்; ஒன்னார் - ஒன்றார்: பொருந்தாதவர்: பகைவர். எயில் - அரண்; பாண் - பாணர்.

(உரை) இயல்தேர் அண்ணல் - இயற்றப்பட்ட தேரையுடைய அரசனே!; அம்ம! - கேட்பாயாக. கழிந்தது - முன்பு; பொழிந்து என - பெய்தேன் என; வான - மழை; கண் மாறினும் - பெய்யாது மாறினும்; தொல்லது - மூற்காலத்தில்; விளைந்து என - விளைந்தேன் என; நிலம் - பூமி; வளம் கரப்பினும் - விளைச்சல் ஒழியினும்; எல்லா உயிர்க்கும் - சகல ஜீவப்பிராணிகளுக்கும்; வாழ்க்கை இல் - உயிர் வாழ்க்கை இல்லை. (அதுபோல,) இன்னும் - இன்னமும்; தம் என - தாரும் என்று; எம்மனோர் இரப்பின் - எம்போல்வார் யாசிப்பாராயின்; (அவரை நோக்கி) முன்னும் கொண்டிர் என - முன்னமேயும் வெகுமதி பெற்றீர் என்று; நம்மனோர் மறுத்தல் - நம் போல்வார் மறுத்தல்; இன்னாது - துன்பமே தரும்; இல்லது நிரப்பல் ஆற்றாதோரினும் - இல்லாப் பொருளை(த்தேடி) நிரப்பமாட்டாத ஏழைகளினும், உள்ளி வருநர் - வெகுமதி அளிப்பர் என்று யாரை நினைந்து வருகின்றார்களோ அவர்கள்; நசை இழப்போரே - (கருதியன கொடாவிட்டால் எற்போரால் மேலாகக் கருதிப் புகழப்படும்) இன்பத்தை இழந்தோரே ஆவர்; அனையையும் அல்லை - (வறுமை காரணமாக எதும் கொடுக்கமுடியாமையின் அது காரணமாக) உள்ள இன்பத்தையும் போக்கிக்கொள்ளும் தன்மையுடையோன் நீ அல்லன்; (இறந்தே விடுவாய்.) நீ—; ஒன்னார் - பகைவரது; ஆர் எயில் - அரிய அரண்; அவர்கட்டு ஆகவும் - அப்பகைவரிடத்ததாகவும்; (அதனை அழித்துக் கொள்வதற்கு முன்னே) நமது என - உங்களதே யென்று; பாண் கடன் இறுக்கும் - பாணர்க்குக் கடனைத் தரும்; வள்ளியோய் - வரையாது கொடுப்போய்; (ஆதலின்) எந்தை - எங்கள் தலைவனே!; நீ—; இரவலர் புரவு - யாசகரைக் காத்தலே; பூண் கடன் - கொள்ளுதல் கடனாகும்.

திணை:—பாடாண்திணை; துறை:—பரிசில் துறை. பரிசிற்றுறையாவது "மண்ணகக் காவல மன்னன் முன்னர், எண்ணியபரிசில் இது என உரைத்தல்"

இது ஊன் பொதி பசுங்குடையார் என்றபுலவர் சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியை நோக்கிக் கூறியது.

"அனையையும் அல்லை" என்றது, இரவலர் கேட்குமுன்னமேயே அவர்கள் குறிப்பறிந்து கொடுக்குந்தன்மையாள் நீ" என்பதை உணர்த்தவும் கூறியது. பொழிந்து, விளைந்து - இறந்தகாலத் தன்மை வினைமுற்றுக்கள். "பொழிந்தென," "விளைந்தென" என்பவற்றை வினையெச்சமாக்கி முறையே மாறினும் "சுரப்பினும்" என்ற வினைகளோடு முடிப்பினும் அமையும். அம்ம என்பது கேள் எனப் பொருள்படுதலை "அம்ம உரை அசை கேண்மின் என்றாகும்" என்ற விதியால் அறிக. வம் - வாரும் என்பதன் மரூஉ. ஆதல் போல் தம் - தாரும் என்பதன் மரூஉ. அவர்கட்டாக = அவர் கட்டு + ஆக. கட்டு = கண் + டு. டு, குறிப்புவினைமுற்று விகுதி. பூண் - முதனிலைத் தொழிற்பெயர்.

ஈவோரிடமே இரப்போர் செல்வர்: இரத்தலினும் ஈயாமை இழிவு.

*ஈயெனவிரத்தலிழிந்தன்றதனெதி
ரீயேனென்றலதனினுமிழிந்தன்று
கொள்ளெனக்கொடுத்தலுயர்ந்தன்றதனெதிர்
கொள்ளேனென்றலதனினுயர்ந்தன்று
தெண்ணீர்ப்பரப்பினிமிழ்திரைப்பெருங்கட
லுண்ணாராகுபநீர்வேட்டோரே
யாவுமாவுஞ்சென்றுணக்கலங்கிச்
சேறொடுபட்டசிறுமைத்தாயினு
முண்ணீர்மருங்கினதர்பலவாகும்
புள்ளும்பொழுதும்பழித்தலல்லதை
யுள்ளிச்சென்றோர்ப்பழியலரதனாற்
புலவேன்வாழியரோரிவிசும்பிற்
கருவிவானம்போல
வரையாதுசுரக்கும்வள்ளியோய்நின்னே. (35)

(அ - ம்) இழிந்தன்று - கேவலமானது; எதிர் - மாறாக; இமிழ் - ஒலி; திரை - அலை; வேட்டோர் - விரும்பியோர்; மா - குதிரை; மருங்கு - பக்கம்; அதர் - வழி; புள் - பறவை; புல - வெறு.

(உரை) ஈ என இரத்தல் - எனக்கு ஒரு பொருளைக் கொடு என்று
யாசித்தல்; இழிந்தன்று - இழிந்தது: அதன் எதிர் - (அவ்வாறு கேட்டும்)
அதற்குமாறாக; ஈயேன் என்றல்—; அதனினும் இழிந்தன்று - அவ்விரத்தி
லினும் அதிகேவலமானது; கொள் என கொடுத்தல் - (ஒருவன் கேட்கு
முன்னேயே குறிப்பறிந்து) இதனைக் கொள்வாயாக என்று கொடுத்தல்;
உயர்ந்தன்று - மேலானது; அதன் எதிர் - (ஒருவன் அவ்வாறு கொடுப்பி
னும்) அதற்கு மாறாக; கொள்ளேன் என்றல்—; அதனினும் உயர்ந்தன்று -
அக்கொடையினும் மேலானது; நீர் வேட்டோர் - தாகம் எடுத்தவர்கள்;
தெள் நீர் பரப்பின் - தெளிந்த நீர்ப்பரப்பினையுடைய; இமிழ்திரை பெரு
கடல் - ஒலிக்கும் அலைகள் பொருந்திய பெரியகடல் நீரை; உண்ணார் ஆகுப -
குடியார்; ஆவும் - பசுவும்; மாவும் - பிற மிருகங்களும் சென்று உண - போ
ய்க் குடித்தலால்; கலங்கி—; சேறொடுபட்ட - சேற்றோடு கூடிய; சிறுமைத்
தாயினும்;—கேவல நிலையில் உள்ளதாயினும்; உண்ணீர் மருங்கின் - குடிநீர்
உள்ள பக்கத்திற்குச் செல்லும்; அதர் பலவாகும் - வழிகள் பலவாக இருக்
கும்; கருவி - உலகத்திற்குத் துணைக்காரணமாகிய; விசும்பின் வானம்போல் -
வானமழைபோன்று; வரையாது - அளவின்றி; சுரக்கும் - யாவும் தருகின்ற
வள்ளியோய! - வள்ளலே; ஓரி - ஓரியே!; புள்ளும் - பக்ஷி சகுனத்தை
யும்; பொழுதும் - புறப்பட்ட வேளையையும்; பழித்தல் அல்லது - யாசகர்
குறை கூறுவரேயன்றி; உள்ளிச்சென்றோர் - யாரிடம் பொருள் பெறக்
கருதிச்சென்றார்களோ அவரை; பழியலர் - அவர் எதும் கொடாதிருப்பி
னும் குறை கூறார். அதனால் நின்னை புலவேன்—; (நீ எனக்கு ஈயாதாயி
யினும்) உன்னை வெறுக்கமாட்டேன் (நான் புறப்பட்ட சகுனம், வேளை
முதலியவற்றையே நொந்துகொள்வேன்) வாழியர் - நீ வாழ்வாயாக.

இது விற்போரில் வல்லோனான வல் வில் ஓரி என்னும் வள்ளலை
நோக்கிக் கழை தின் யானையார் என்ற புலவர் கூறியது.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசிற்றுறை.

இதனைக் கூறிய புலவர் அவ்வள்ளலை நோக்கி "இரத்தல், ஈயாமை,
ஈதல், ஏலாமை என்னும் நான்கனுள் "இரத்தல்" மேற்கொண்டு யான்
"ஈ என இரந்து" நின்பால் வறுமை காரணமாக வந்தேன். ஆதலின்
"ஏலாமை"யாகிய "கொள்ளேன்" என்று சொல்லும் உயர்வு யான் பெற்
றிலேன். யான் இவ்வாறு இரக்கவும், "ஈயாமை" மேற்கொண்டவன்
போல் நீ பொருள் தரக் காலம் தாழ்க்கின்றாயாதலின், "ஈயேன்" என்று
உரைக்கும் இழிவுற்று, "ஈதல்" ஆகிய "கொள் எனக் கொடுத்தல்" என்
னும் உயர்வு நீ பெற்றிலை. ஈயாமையின் இழிவினும், ஈதலின் உயர்வினும்
நினக்கு எது தக்கதோ அதை அறிந்து செய்வாயாக: நீர் வேட்கையுள்ளோர்,

நீர் மிகுத்ததாயினும் கடல்பால் செல்லாது, அற்பமாக இருப்பினும் குடிநீருள்ள இடம் நோக்கியே செல்வது போல், எம்போலியர், உலோபிகள் செல்வ வந்தராயினும், அவர்பால் தம் வறுமைப் பிணியை நீக்கிக்கொள்ளச் செல்லாமல் நின்போன்று வரையாது கொடுப்போரிடமே செல்வர். சென்றும், எதும் பெறுவிடினும் தம்மையே நோவினன்றி ஈயாதாரைக் குறை கூறுார்" என்று கூறினர் என்பதுகருத்து.

இழிந்தன்று, உயர்ந்தன்று—இவற்றில் இழி - உயர் - பகுதி; று - விகுதி; த் இடைநிலை, த் சந்தி. சந்தியால் வந்த தகரம் மெலித்தல் விகாரம் பெற்றது; அன் - சாரியை. இமிழ்திரை - வினைத்தொகை; கடல் கடத்தற்கு அருமையானது: சமுத்திரம். தெண்ணீர் - பண்புத்தொகை. ஆகுப - ப பலர்பால் விகுதி - உண - செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் காரணப் பொருளில் வந்தது. கிட்டல் - நீருக்கு ஆகுபெயர். உண்ணீர் - வினைத்தொகை. மருங்கின் - இன்சாரியை வாழியர்— நின்னே - ஏ அசை.

புறப்பொருள்வெண்பாமாலை.

பொருளை ஒளியாமல் இரவலர்க் கீதல்.

முல்லைக்குத்தேருமயி லுக்குப்போர்வையு
மெல்லைநீர்ஞாலத்திசைவிளங்கத்—தொல்லை
யிரவாமலீந்தவிறைவர்போனீயுங்
கரவாமையீதல்கடன். (36)

(அ - ம்) இசை - கீர்த்தி; தொல்லை - முற்காலம்; இறைவர் - தலைவர்; கர - ஒளி.

(உரை) நீர் எல்லை ஞாலத்து - கடலை எல்லையாகவுடைய பூலோகத்தில், இசை விளங்க - தம் கீர்த்திவிளங்க; தொல்லை - முற்காலத்தில்; முல்லைக்கு தேரும் - முல்லைக்கொடிவளருமாறு தேரையும்; மயிலுக்குப் போர்வையும்—; இரவாமல் ஈந்த இறைவர்போல் - தம்மை அவை வேண்டாதிருக்கும்போதே கொடுத்த வள்ளல்களைப்போல நீயும்—; கரவாமல் - உன் பொருளை ஒளித்துவையாமல், ஈதல் - இரவலர்க்குக் கொடுத்தல்; கடன் - கடமையாகும்.

திணை - பாடாண் திணை; துறை - இயன்மொழிவாழ்த்து. (அதாவது "இன்னோர் இன்னவை கொடுத்தார்; நீயும், அன்னோர் போல அவைநமக் கீ"கென, என்னோரும் அறிய எடுத்துரைத்திடுவது)

முல்லைக்குத்தேர் கொடுத்தவன் - பாரி. இவன் கடைஎழு வள்ளல்களுள் தலைசிறந்தவன். ஒருநாள் இவன் தேர் ஊர்ந்து வனமார்க்கமாகச் செல்கையில் ஓர் முல்லைக்கொடி கொழுகொம்பின்றியும் வெயிலால் வாடியும் இருத்தல் நோக்கி, அது ஏறிப் படருமாறும், அதற்கு நிழல் தருமாறும் தன் சிறந்த பொற்றேரை அதனருகில் நிறுத்திக் காலால் நடந்து வீடுதிரும்பினன். இதனால் ஓரறிவுயிராகிய செடியிடத்தும் இவனது கருணை இனிது விளங்கும்.

மயிலுக்குப் போர்வை ஈந்தவன் - பேகன். இவனும் கடையெழுவள்ளல்களில் ஒருவன். இவன் ஒருநாள் மலை மார்க்கமாகச் செல்கையில் மயில் தன் சிறகைவிரித்துக் கூவ, அது குளிரால் வருந்திக் கூவுகிறதென எண்ணித் தன் விலைமதிப்பரிய போர்வையை அதற்குப் போர்த்தித் திரும்பினன்.

"இரவாமல் ஈந்த" என்பதனால் அருள்மிகுதி விளங்கும். நீயும் - உம் இறந்தது தழுவியது; இறைமை - தலைமை.

தேகம் அநித்தியம் ஆதலின் செல்வத்தைத் தானத்தில் செலவிடுக.

ஆயாதறிவயர்ந்தல்லாந்தகலிடத்து
மாயாநிதியமனைச்செறீஇ—ஈயா
திறுகப்பொதியன்மினின்றுநாளைக்
குறுகவருமரோகூற்று. (37)

(அ - ம்) ஆய் - யோசி; அயர் - மற; அல்லாந்து - மகிழ்ந்து; மாய் - அழி; செறீஇ - சேர்த்து, நிறைத்து; பொதி - மறை; குறுக - அணுக.

(உரை) ஆயாது - யோசனையின்றி, அறிவ அயர்ந்து - உணர்ச்சி இழந்து; அல்லாந்து - மகிழ்ந்து; அசல் இடத்து - விசாலமான இப்பூமியில்; மாயா நிதியம் - அழியாச் செல்வத்தை; மனை செறீஇ - மனையிற் சேர்த்து; ஈயாது - வறியோர்க்கு ஈயாமல்; இறுகபொதியன்மின் - இறுக்கிக் கட்டிவையாதேயுங்கள் (ஏனெனில்), இன்று நாளை - இன்றைக்கோ நாளைக்கோ; கூற்று எமன்; குறுக - உம்மை அணுக; வரும் - வருவான்.

ஓ - அரோ - அசைகள். எமன் இன்னகாலத்தில் வருவான் என்பது தெரியாதாதலால் "கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன் முன் உள்ளங் கனித்தறஞ் செய்யுங்க." என்பது கருத்து.

திணை - பாடாண்டிணை; துறை - பெருங்காஞ்சி. (அதாவது நிலையாமை யாகிய நெறி உணர்த்துவது.) அகல் இடம் - வினைத்தொகை. நிதியம் - அம் சாரியை. கூற்று - உடலையும் உயிரையும் கூறு (பிரிவு) செய்வது; எமன்.

சீவகசிந்தாமணி.

மறுமையில் லோபிகள் உறுந் துன்பம்.

மாசித்திங்கண்மாசினசின்னத்துணிமுள்ளி
னூசித்துன்னமூசியவாடையுடையாகப்
பேசிப்பாவாய்பிச்சையெனக்கையகலேந்திக்
கூசிக்கூசிநிற்பர்கொடுத்துண்டறியாதார். (38)

(அ-ம்) திங்கள் - மாதம்; மாசு - அழுக்கு; சின்னம் - கந்தை; துன்னம் - தையல்; மூசு - நெருங்கு; பாவை - பதுமை (போன்ற பெண்); அகல் - ஓடு.

(உரை) கொடுத்து உண்டு அறியாதார் - முற்பிறப்பில் யாசகர்க்குக் கொடுத்துத் தாமும் உண்டறியாத லோபிகள்; மாசின - அழுக்கேறியவைகளான; சின்னம் துணி - கந்தைத் துணிகளை; முள்ளின் - முள்ளாகிய; ஊசி துன்னம் - ஊசியால் தைத்த தையல்கள்; மூசிய ஆடை - நெருங்கிய வஸ்திரத்தை; மாசி திங்கள் உடை ஆக - குளிர் மிக்க மாசி மாதத்தில் தரிக்கும் உடையாகக் கொண்டு; கை - கையில்; அகல் ஏந்தி - ஓட்டை ஏந்திக் கொண்டு; பாவாய் பிச்சை - அம்மா பிச்சை!; என பேசி - எனக்கூறி; கூசி கூசி நிற்பர் - பிச்சை பெறும் வீட்டிற்குள் செல்லவும் மிக மனம் கூசி வெளியே நிற்பர்.

துறவறம் எய்தக் கருதிய ஜீவகன் தன் மனைவிமாரும் அஃதெய்துமாறு அவர்களுக்கு உபதேசித்து வந்த சமயத்திற் கூறியது இது.

முள்ளை ஊசியாகக் கொண்டது, ஊசி வாங்கவும் விதியின்மையின். மாசித் திங்கள் - இருபெயரொட்டு. மாசின - இன் சாரியை. பாவை - உவமையாகு பெயர்; மாசி, ஊசி, பிச்சை - இவை முறையே மாகம், ஸூசி, பிக்ஷா என்னும் வடமொழித் திரிபுகள்.

பெரும்பொருள்விளக்கம்.

உலோபிகளுக்கு "மனிதர்" எனும் பெயர் தகாது.

மின்னுந்தமனியமும்வெற்றிரும்புமோரினமாய்ப்
பொன்னின்பெயர்படைத்தாற்போலவே—தொன்னே
யொளிப்பாருமக்களாயொல்லுவதாங்கே
யளிப்பாருமக்களாமாறு. (39)

(அ-ம்) தமனியம் - பொன்; ஆறு - தன்மை. தொன்னே - வீணை.

(உரை) கொன்னே - வீணாக; ஒல்லுவது ஒளிப்பாரும் - தாம் தமக்குடைய பொருளைத் தாராமல் மறைத்துவைக்கும் லோபிகளும்; மக்கள் ஆய் - மனிதர் என்னும் பேர்பெற; அளிப்பாரும் - கொடையாளர்களும்; ஆங்கே - அவ்வாறே; மக்கள் ஆம் ஆறு - மனிதர் என்று சொல்லப்படும் தன்மை; மின்னும் தமனியமும் - பிரகாசிக்கும் தங்கமும்; வெறு இரும்பும் - சிறப்பில்லாத இரும்பும்; ஓர் இனம் ஆய் - ஓர் இனத்தின் பகுதியாகி; பொன்னின் பெயர் —'பொன்' என்ற பெயரை; படைத்தால் போலவே - பெற்றாற் போல் ஆகும் அன்றோ?

இது உவமையணி. தங்கத்தைச் 'செம்பொன்' என்றலும் இரும்பைக் 'கரும்பொன்' என்றலும் வழக்கு. அன்றியும் பொன் என்பது எல்லா உலோகங்களுக்குமே பொதுப்பெயர் ஆதலை "அழகும் ஐவகை உலோகமும் இரும்பும், திருவும் வியாழமும் பொன் எனச் செப்புவர்" என்ற பிங்கலந்தையால் அறிக. தமனியம் - தபநீயம் என்பதன் திரிபு (தபநீயம்=சுடச்சுட விளங்குவது.)

நாலடியார்.

ஈயாதவன் இல்லாதவனாக எண்ணப்படுவான்.

உண்ணானொளிநிறானோங்குபுகழ்செய்யான்
துன்னருங்கேளிர் துயர்களையான் — கொன்னே
வழங்கான் பொருள்காத்திருப்பானேல்அஆ
விழந்தானென்றெண்ணப்படும். (40)

(அ-ம்) ஒளி - கீர்த்தி; கேளிர் - உறவினர்; வழங்கு - கொடு; களை - நீக்கு.

(உரை) உண்ணான் - (ஒருவன்) தான் உண்ணாதவனாயும்; ஒளிநிறான் - மதிப்பை நிலைநிறுத்தாதவனாகவும்; ஓங்கு புகழ் செய்யான் - மிக்க கீர்த்தியைச் சம்பாதியாதவனாகவும்; துன் அரு கேளிர் - சேர்தற்கு அரிய உறவினரது; துயர் களையான் - துன்பத்தை நீக்காதவனாயும்; வழங்கான் - ஏழைகளுக்குக் கொடாதவனாகவும்; பொருள் கொன்னே காத்து இருப்பானேல் - செல்வத்தை வீணாகக் காத்துக்கொண்டிருப்பானாயின்; அஆ — ஐயோ!; இழந்தான் என்று - அப்பொழுது இழந்துவிட்டவனாகவே; எண்ணப்படும் - கருதப்படுவான்.

ஒளி - ஜீவதசையில் யாவராலும் நன்கு மதிக்கப்படுதல்.

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

உடாஅதுமுண்ணாதுந்தம்முடம்புசெற்றுங்
கெடாஅதநல்லறமுஞ்செய்யார்—கொடாஅது
வைத்தீட்டினாரிழப்பர்வான்றோய்மலைநாட
வுய்த்தீட்டுந்தேனீகரி. (41)

(அ - ம்) செறு - வருத்து ; ஈட்டு - தேடு ; தோய் - தொடு ; உய் - கொண்டுவை; கரி - சாக்ஷி.

(உரை) வான்தோய் மலைநாட - ஆகாயம் அளாவிய மலைகளையுடைய நாட்டிற்குரிய பாண்டியனே !; உடாஅதும் - நல்ல உடுப்புக்களை உடாமலும்; உண்ணாதும் - நல்லுணவு உண்ணாமலும்; தம் உடம்பு செற்றும் - தமது உடம்பை வருத்தியும்; கொடாஅத நல்லறமும் செய்யார் - அழியாத நல்ல தருமங்களைச் செய்யாமலும் ; வைத்து ஈட்டினார் - பொருள் ஈட்டி வைத்தவர்கள் ; இழப்பர் - அச்செல்வத்தைப் பறி கொடுத்துவிடுவர். (இதற்கு) உய்த்து ஈட்டும் - (பல மலரினின்றும் தேன்) கொண்டுவந்து சேர்க்கும் ; தேன் ஈ - தேனீக்கள் ; கரி - சாக்ஷியாகும்.

தேனீக்கள் பல மலர்களின்றும் பலநாள் சேர்த்த தேனை ஒருநாள் ஒருவன் பறிகொடுத்து விடுவதுபோல் உலோபிகள் பல நாள் பாடுபட்டுச் சேர்த்த பணத்தைத் தீயோர் கொள்ள விடுவர் என்பது கருத்து. நாட - ஆடூஉ முன்னிலை. அளபெடைகள் செய்யுளிசை நிறைக்க வந்தவை.

சற்பாத்திர தானத்தின் பெரும் பயன்.

உறக்குந்துணையதோராலம்வித்தீண்டி
யிறப்பநிழற்பயந்தாஅங்—கறப்பயனுந்
தான்சிறிதாயினுந்தக்கார்கைப்பட்டாக்கால்
வான்சிறிதாப்போர்த்துவிடும். (42)

(அ - ம்) உறக்கும் - விரலாற் கிள்ளியெடுக்கும் ; துணை - அளவு ; ஈண்டி - வளர்ந்து ; இறப்ப - மிக ; பய - கொடு ;

(உரை) உறக்கும் துணையது - விரலாற் கிள்ளியெடுக்கும் அளவுள்ள (அவ்வளவு சிறிதாகிய) ; ஓர் ஆலம் வித்து - ஆலமரத்தின் ஓர் விதை; ஈண்டி - வளர்ந்து; இறப்ப நிழல் பயந்த ஆங்கு - மிகவும் நிழல் தந்தாற்போல; தான் சிறிதாயினும் -, (தானப்பொருள்) சிறிதாக இருந்தாலும் ; தக்கார் கைபட்

டாக்கால் - பெறத்தகுதியுள்ள மேலோர் கையிற் சேர்ந்தால்; வான் சிறிது ஆ(க) - (விசாலமான) ஆகாயமும் சிறியதென்னும்படி; அறம் ... தரு மத்தின் மேலான பயனை; போர்த்துவிடும் - பரப்பிவிடும்.

பயந்து - பயத்தால்; எச்சத்திரிபு. பயந்தாஅங்கு - சொல்லிசை யளபெடை. ஆங்கு - உவமஉருபு.

பொருள் கிடைத்துளபோதே அறஞ்செய்தல்.

முன்னரேசாநாண்முனிதக்கமூப்புள
பின்னரும்பீடழிக்குநோயுள—கொன்னே
பரவன்மின்பற்றன்மின்பாத்துண்மின்யாதுங்
கரவன்மின்கைத்துண்டாம்போழ்து. (43)

(அ - ம்) முன்னரே - நேரிற் காணும்படி; முனி - வெறு; பீடு - பெருமை; பரவு - நாற்புறமும் அலை; பற்று - இறுக்கிப்பிடி; பாத்து - பங்கிட்டு; கா - ஒளி; கைத்து - கைப்பொருள்.

(உரை) முன்னரே - நீங்கள் நேரிற் காணும்படியாகவே; சாநாள் - சாகும் காலமும்; முனி தக்க மூப்பு உள - வெறுக்கத்தக்க கிழத்தனமும் இருக்கின்றன; பின்னரும் - அன்றியும்; பீடு அழிக்கும் நோய் உள - வலிமையின் பெருமையைக்குலைக்கும் வியாதிகளும் உள்ளன; (ஆதலால்) கைத்து உண்டாம் போழ்து - கைப்பொருள் இருக்கும் காலத்திலேயே; கொன்னே பரவன்மின் - வீணைகப் பொருள்தேட ஓடி யலையாதேயுங்கள்; பற்றன்மின் - உள்ள பொருளை இறுகப்பிடியாதேயுங்கள்; பாத்து உண்மின் - யாசகர்க்குப் பங்கிட்டுக்கொடுத்து நீங்களும் அனுபவியுங்கள்; யாதும் கரவன்மின் - கேட்போர்க்கு எதனையும் ஒளியாது கொடுங்கள்.

"பிறர் நரை திரை மூப்பு சாக்காடெய்துவதை நேரில் கண்டறிந்தாயினும் நமக்கும் அவை எய்தும் என்றெண்ணித் தாமதியாது பொருளை அறநெறியிற் செலவிடுவீர்களாக" என்பது கருத்து.

முனி - முதனிலைத் தொழிற்பெயர், நான்காம் வேற்றுமைத் தொகை. பாத்து, போழ்து - பகுத்து, பொழுது என்பவற்றின் மரூஉ.

வறியோர்க்கு ஈவதே ஈகை.

எற்றகைமாற்றாமையென்னுந்தாம்வரையா
தாற்றாதார்க்கீவதாமாண்கடன்—ஆற்றின்
மலிகடற்றண்சேர்ப்பமாறீவார்க்கீதல்
பொலிகடனென்னும்பெயர்த்து. (44)

(அ - ம்) ஏற்ற - இரந்த ; வரை - எல்லை ; ஆண் - மனிதன் ; மலி - மி[illegible] ; சேர்ப்பு - சேர்க்கை (சேர்ந்த நாடு) ; மாறு - பதில் ; பொலி - விளங்கு ; பெயர்த்து - பெயரையுடையது.

(உரை) மலி கட[illegible] தண் - (வளப்பம்) மிக்க கடலின் குளிர்ச்சியான சேர்ப்ப - துறையை உ[illegible] பாண்டியனே ; ஏற்ற கை மாற்றாமை - (யாசகன்) ஏந்திய கையை ம[illegible]க்காமல் ; என் ஆனும் [illegible]தனையேனும், வரையாது - (இன்னான் இன்[illegible]னென்று) வரை[illegible]றபடுத்திக் கொள்ளாமல், ஆற்றாதார்க்கு - பிரதி செய்[illegible]முடியாத தரி[illegible]திரர்க்கு ; ஆற்றின் - முறையாக ; ஈவது - கொடுப்ப[illegible] ; ஆண் கட[illegible] ஆம் - மனிதர்க்குரிய கடமை ஆகும் ; மாறு ஈவார்க்[illegible] ஈதல் - பிரதிசெய்யக் கூடியவர்களுக்குக் கொடுத்தல் ; பொலி - யாவர்க்கும் விளங்கும் ; கடன் என்னும் பெயர்த்து - கடன் என்ற பெயரை யுடையது.

வறிஞர் யாவராயினும், அவர்க்கு, இல்லை யென்னாமல் இயன்ற தளிப்பதே ஆண்மைக்குரியது. பிரதி கருதி உடையோர்க்கீவது ஐயந் திரிபுக்கிடனின்றி கடனேயாகும் என்பது கருத்து.

மாற்றாமை - மையீற்று எதிர்மறை வினையெச்சம் ; என், ஆனும் இவை முறையே எவன், ஆயினும் என்பவற்றின் மரூஉ. பொலிகடன் - வினைத்தொகை ; பெயர்த்து ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்று.

உலோபியை அருளும் பொருளும் பரிகசித்தும்.

துய்த்துக்கழியான் துறவோர்க்கொன்றீகலான்
வைத்துக்கழியுமடவோனை — வைத்த
பொருளுமவனைநகுமேயுலகத்
தருளுமவனைநகும். (45)

(அ - ம்) துய் - அனுபவி ; கழி - இற.

(உரை) துய்த்து கழியான் - (தனக்குள்ள பொருளை) அநுபவித்துக் காலங்கழியாமலும், துறவோர்க்கு - பிறரால் கைவிடப்பட்டவர்க்கு ; ஒன்று ஈகலான் - ஏதும் தராமலும் ; வைத்துக்கழியும் - வீணில் சேர்த்துவைத்து இறக்கிற ; மடவோனை - மூடனாகிய ; அவனை - அவ் உலோபியை ; உலகத்து— ; வைத்த பொருளும் நகும் - அவன் தேடிவைத்த செல்வமும் சிரிக்கும் ; அருளும் அவனை நகும் - அருளும் அவனைப் பரிகசிக்கும்.

"துறவோர்க்கு" என்பதற்கு சந்யாசிகளுக்கு" எனப்பொருள் கொள்ளினும் அமையும். ஈகலான் கழியான் - எதிர்மறை முற்றெச்சங்கள் ; ஈக

லான் - ஈ பகுதி; கு சாரியை; அல் எதிர்மறை விகுதி; ஆன் ஆண்பால் விகுதி. அருளும் பொருளும் நகும் என்றது மரபு வழுவமைதி. அன்றி அருட் கடவுளும், வைத்த பொருளை அவனுக்குப்பின் அடைவோரும், என்றும் கொள்ளலாம். பொருளும் அருளும் - உம்மைகள் முறையே எதிரதும் இறந்ததும் தழுவிய எச்சப் பொருளன.

ஈயார் பொருளை ஏனையரே அநுபவிப்பர்.

கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றாவிடுக்குடை-
யுள்ளத்தான் பெற்றபெருஞ்செல்வ—மில்லத்
துருவுடைக்கன்னியரைப்போலப்பருவத்தா
லேதிலான் றுய்க்கப்படும். (46)

(அ - ம்) தேறு - தெளி; இடுக்கு - உலோபம்; உரு - அழகு. ஏதிலான் - சம்பந்தம் இல்லாதவன்: அந்நியன்;

(உரை) கொடுத்தலும் துய்த்தலும் தேற்றா - பிறர்க்குக் கொடுப்பதையும் தான் அனுபவிப்பதையும் தெளிந்தறியாத; இடுக்கு உடை உள்ளத்தான் - உலோபம் நிறைந்த மனமுள்ளவன்; பெற்ற பெருஞ்செல்வம்—; இல்லத்து - வீட்டிற் பிறந்த; உரு உடை - அழகுள்ள; கன்னியரைப்போல் - பெண்களைப்போல; பருவத்தால் - அனுபவிக்க வேண்டிய பருவத்தில்; ஏதிலான் - சம்பந்தமில்லாத அயலானால்; துய்க்கப்படும் - அனுபவிக்கப்படும்.

வீட்டிற் பிறந்த பெண் அயலான் அநுபவித்தற்கே உரியள்; அது போல உலோபியின் செல்வமும் அயலானின் அநுபவத்திற்கே உரியது என்பது கருத்து. தேற்றா - ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம்; உருவுடை, இடுக்கு உடை - உடை ஈறுகெட்டன; கன்னி - இங்கு "இல்லம்" என்ற குறிப்பால் சொந்தப் பெண்ணை உணர்த்திற்று; பருவத்தால் - உருபு மயக்கம். ஏதிலான் = ஏது + இலான்; ஏது - சம்பந்தம்.

ஈயாதான் ஈட்டியதும் இல்லாதான் ஈட்டாததும் ஒன்றே.

எனதெனதென்றிருக்குமேழைபொருளை
யெனதெனதென்றிருப்பன்யானுந்—தனதாயிற்
றானுமதனைவழங்கான்பயன்றுவ்வான்
யானுமதனையது. (47)

(அ - ம்) ஏழை - அறிவில்லாதவன். துவ் - அநுபவி. வழங்கு - கொடு.

(உரை) எனது எனது என்று இருக்கும் - தன்னது தன்னது என்று அபிமானங்கொண்டு சேர்த்துள்ள; ஏழை பொருளை - அறிவில்லாத லோபியின் செல்வத்தை; யானும் - (அப்பொருளுக்கு எச்சம்பந்தமும் இல்லாத) நானும்; எனது எனது என்று— இருப்பன் - (மகிழ்ந்து) இருப்பேன். தனது ஆயின் - அச் செல்வம் அவனதாயின்; தானும் - அவனும்; அதனை வழங்கான்—; பயன் துவ்வான் - அதனால் ஆன இன்பப் பயனை அனுபவிக்கின்றானும் இலனே! யானும்—; அதனை - அப்பொருளை; அது - அங்ஙனமே (செய்வேன்)

உலோபியும், ஏழையும் செல்வப்பயனை அனுபவிக்கிறதில்லை யாதலால் இருவரும் ஒன்று என்று உலோபியைப் பரிகசித்துக்கூறினர் இது.

எனது - வினையாலணையும் பெயர். ஆறாம் வேற்றுமை யன்று. ஏழை - இங்கு அறிவுப்பொருள் இல்லான்; துவ்வான் - து பகுதி, ஆன் விகுதி; வ் உடம்படுமெய்; வ் சந்தி எதிர்மறை ஆகாமல் கெட்டது.

ஈயாச்செல்வர்க்கு உள்ள கஷ்டம் ஏழைகளுக்கு இல்லை.

வழங்காதசெல்வரினல்கூர்ந்தாருய்ந்தா
ரிழந்தாரெனப்படுதலுய்ந்தா—ருழந்ததனைக்
காப்புய்ந்தார்கல்லுதலுமுய்ந்தார்தங்கைந்நோவ
யாப்புய்ந்தாருய்ந்தபல. (48)

(அ-ம்) உய் - தப்பிக்கொள்; உழந்து - வருந்தி; கல் - தோண்டு; யாப்பு - கட்டு.

(உரை) வழங்காத செல்வரின் - இரப்போர்க்கு ஈயாத செல்வான்களினும்; நல்கூர்ந்தார் - வறிஞர்; உய்ந்தார் - கஷ்டங்களினின்றும் தப்பினவர் ஆவார். (எங்ஙனமெனில் அவர்கள்); இழந்தார் எனப்படுதல் உய்ந்தார் - பொருளைப் பறிகொடுத்துவிட்டார்கள் என்ற அபவாதத்தினின்றும் தப்பினாவர்; அதனை உழந்து காப்பு உய்ந்தார் - அப்பொருளை வருந்திக் காக்கும் சிரமத்தினின்றும் தப்பினவர் ஆவர்; கல்லுதலும் உய்ந்தார் - (புதைத்து வைத்த பணத்தைத்) தோண்டும் வருத்தத்தினின்றும் தப்பினாவர்; தம் கைநோவ—; யாப்பு உய்ந்தார் - இறுகிக் கட்டிவைக்கும் சிரமத்தினின்றும் தப்பினோராவர்; உய்ந்த பல - (இங்ஙனம் அவர்) தப்பினவை இன்னும் எவ்வளவோ உண்டு.

இப்பாட்டுடன் “இன்னரும் பொருளை ஈட்டுதலும் துன்பமே, பின் னதனைப் பேணுதலும் துன்பமே — அன்ன, தறித்தலும் துன்பமே அந்தோ பிறர்பால், இழத்தலும் துன்பமே ஆம்” “வள்ளன்மையில்லா

...ன் ......இகழப்படான்" என்ற 25-வது செய்யுளையும் ஒப்பிட்டுணர்க. உய்ந்த பல :— "அருளிலன் அன்பிலன் கண்ணறையன்" என்று பல ராலும் இகழப்படுதல் முதலியன. கல்லுதல் - கல் ... குதி; உ சாரியை; தல் தொழிற்பெயர் விகுதி. உய்ந்த - வினையாலணையும் பெயர்.

... உலோபிகளின் தன்மை.

தனதாகத் தான்கொடான் றாயத்தவரும்
தமதாயபோழ்தேகொடாஅர் — தனதாக
முன்னேகொடுப்பினவர்கடியார் தான்கடியான்
பின்னையவர்கொடுக்கும்போழ்து. (49)

(அ - ம்) தாயத்தவர்; தந்தைவழி உறவினர்; கடி - விலக்கு.

(உரை) தனது ஆக - (பொருள்) தனது ஆக இருக்கையில்; தான் கொடான் - (உலோபி) வறியோர்க்கு ஈயான்; தாயத்தவரும் - தாயத்தாரும்; தமது ஆய போழ்தே - (அவன் இறந்தபின் அப்பொருள்) தமக்குச் சொந்தமான போது; கொடார் —; முன்னே - முன்பு (தான் வாழ்ந்த காலத்தில்); தனது ஆக - அப்பொருள் தனக்கே சொந்தமாக இருக்கையில்; கொடுப்பின் —; அவர் கடியார் - தாயத்தார் விலக்கார்; பின்னை - (அவன் இறந்த) பின்பு; அவர் கொடுக்கும் போழ்து - அத்தாயத்தவர் தானம் செய்யும்போது; தான் கடியான் - இறந்தவன் வந்து விலக்க மாட்டானே?

உலோபி தன் பொருளைத் தான தருமங்களிற் செலவிடாதிருப்பினும் அப் பொருளைப்பெறும் தாயத்தாராவது, அது கொண்டு தான தருமம் செய்யலாம் அன்றோ? அவ்வாறு செய்யாத தாயத்தாரையும் வீணில் பொருள் தேடியவனையும் இழித்துக்கூறியது இது. முன்னே - ஏ சாரியை; பின்னை - ஐ சாரியை. கொடாஅர் - அளபெடை, செய்யுள் இசை நிறைக்க வந்தது.

பழமொழி.

உலோபியின் செல்வம் அவனுக்கும் பிறர்க்கும் பயன்படாது.

வழங்கலுந்துய்த்தலுந்தேற்றாதான்பெற்ற
முழங்குமுரசுடைச்செல்வம் — தழங்கருவி
வேய்முற்றிமுத்துதிரும்வெற்பவஃதன்றோ
காய்பெற்றதெங்கம்பழம். (50)

(அ - ம்) தழங்கு - சப்தி; வேய் - மூங்கில்; வெற்பு - மலை; தெங்கம் பழம் - தேங்காய்.

(உரை) தழங்கு அருவி - ஒலிக்கும் நீர் அருவிகள் (கொண்டு); கம் வேய் முற்றி - மூங்கில்கள் முதிர்ந்து; முத்து உதிரும் - அவற்றினின்றும் முத்துக்கள் சிந்தப்பெறுவதும் ஆன; வெற்ப - மலைநாடு கொண்ட பாண்டியனே! வழங்கலும் துய்த்தலும் - பிறர்க்குக் கொடுத்தலையும் தான் அனுபவித்தலையும்; தேற்றாதான் - செய்து தெளியாதவன்; பெற்ற—; முழங்கு முரசு உடை செல்வம் - (திரிகாலங்களிலும்) பேரிகை முழங்கப்பெற்ற பெருஞ்செல்வமாகிய; அஃதன்றே - அதுவே; நாய் பெற்ற—; தெங்கம் பழம் - தேங்காய் போல்வது.

நாய்க்குத் தேங்காய் கிடைப்பின் அதனை உடைத்துத் தின்ன வகையறியாமலும் பிறர்க்குத் தரமனமில்லாமலும் அதனை வீணாக்கும். உலோபிகளும் செல்வம் பெற்றால் தாம் அனுபவிக்கும் வகையும் அறியார்; பிறர்க்கும் ஈயாது அதனை வீணாக்குவர் என்பது கருத்து.

"பழம்போல்வது" என்னாது "பழம்" என்றது காட்சியணி (உவம உருபு இன்றி உபமான உபமேயங்களுக்கு ஒற்றுமை ஏற்றிக்கூறல்). முன் காலத்தில் செல்வர் தலைவாயிலில் அந்தி சந்தி பகல் ஆகிய 3-வேளைகளிலும் பேரிகை அடிப்பது இயல்பு. ஆதலின் "முழங்கு முரசுடைச் செல்வம்" என்னப்பட்டது. மூங்கிலில் மட்டுமேயன்றிப் பலவிடங்களிலும் *முத்துப் பிறக்கும் என்பதைப் பின் வரும் செய்யுளால் அறிக:—தந்தி, வராக மருப், பிப்பி, பூகம், தழை கதலி, நந்து, சலசஞ்சலம், மீன்தலை, கொக்கு, நளினம், மின்னார் கந்தரம், சாலி, கழை, கன்னல், ஆவின்பல், கட்செவி, கார், இந்து, உடும்பு, கரா, முத்தம் ஈனும் இருபதுமே." முரசு - முரஜம் என்பதன் திரிபு. முத்து - சிப்பிமுதலியவற்றினின்றும் விடுபடுவது (முக்தி - விடுபடுதல்; முக்தா - முத்து) முற்றி - எச்சத் திரிபு. தெங்கம் - அம் சாரியை.

சிறுபஞ்சமூலம்.

வள்ளல்களை வானவரும் போற்றுவர்.

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சா
னிகழ்ந்தவையின் புறானில்லார்—மொழிந்தவை
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரா
லின்மொழியா லேத்தப் படும். (51)

(அ - ம்) இரங்கு - வருந்து; நச்சு - விரும்பு; ஏத்து - துதி.

---

*முத்தைப்பற்றிய சகல விஷயமும் அறிய விரும்புவோர் எனது அரும்பொருட்டிரட்டிற் கண்டு கொள்க.

(உரை) (ஒருவன்) கழிந்தவை - நடந்துபோன விஷயத்திற்காக; தான் இரங்கான் - தான் வருந்ாதவனுய், கைவரா - கைக்கு வாராதபொருளை; நச்சான் - விரும்பானுய்; இகழ்ந்தவை - அறிஞர் இகழ்ந்தவைகளில் இன்புறான் - பிரியம் கொள்ளாதவனுய்; இல்லார் மொழிந்தவை - ஏழைகள் கூறிய பொருளை; மென்மொழியால் - மெதுவான சொற்களுடனும்; உள் நெகிழ்ந்து ஈவானேல் - மனமிரங்கியும் அவர்களுக்குத் தருவானுயின்; விண்ணோரால் - தேவர்களால்; மென் மொழியால் - இன் சொற்களால்; ஏத்தப்படும் - அவன் துதிக்கப்படுவான்.

கைவரா - எதிர்மறைப் பலவின்பால் வினையால் அணையும் பெயர்; இதில் கை வா பகுதி; ஆ விகுதி; பகுதியின் ஈறு குறுகியதும், ரகர ஒற்று விரித்தலும் விகாரங்கள். இதில் இரங்காமை, நச்சாமை, இன்புறாமை, மென்மொழி கூறல், ஈதல் - என 5 விஷயங்கள் அடங்கியிருத்தல் காண்க.

மூதுரை.

நல்லோர்க்குச் செய்த நன்றியே நிலைக்கும்.

*நல்லாரொருவர்க்குச்செய்தவுபகாரங்
கன்மேலெழுத்துப்போற்காணுமே—யல்லாத
வீரமில்லாநெஞ்சத்தார்க்கீந்தவுபகார
நீர்மேலெழுத்திற்குநேர். (52)

(உரை) நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்—; கல்மேல் எழுத்துப் போல் - கருங்கல்லின்மேல் செதுக்கப்பட்ட எழுத்துக்களைப்போல; காணும்-நிலைத்துத் தோன்றும்; அல்லாத - நல்லோர் அல்லாத (தீய); ஈரம் இல்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த - அன்பு இல்லா உள்ளத்தார்க்குச் செய்த; உபகாரம்—; நீர்மேல் எழுத்துக்கு நேர் - நீர் மேல் எழுதப்பட்ட எழுத்துக்களுக்கு ஒப்பாகும் (அதாவது அப்பொழுதே அழிந்துவிடும்).

இச் செய்யுளில் செய்த, ஈந்த என்ற வார்த்தைகளை நன்கு கவனிக்கவும். நல்லோர்க்கு, அவர் கேளாமலே நாம் செய்த உபகாரத்திற்கு அவர்கள் நிலையாக நன்றிபாராட்டுவதும், ஈரமிலா நெஞ்சினர் ஈ என்ன நம்மைக் கேட்டுப் பெற்ற உபகாரத்தை உடனே மறப்பதும் அவ்வவர் இயற்கையை விளக்கும்.

ஒருவர் - மரியாதைப் பன்மை. ஈரம் - குளிர்ச்சி, இங்கு அன்பு. இல்லா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; ஈந்த ஈ பகுதி, த் இடைநிலை த் சந்தி, அ விகுதி, தகரம் நகரம் ஆனது விகாரம். எழுத்து - முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்;

வான்குடிப் பிறந்தோர் வறுமையினும் ஈவர்.

*ஆற்றுப்பெருக்கற்றடிசுடுமந்நாளுமவ்வா
றூற்றுப்பெருக்கா லுலகூட்டு—மேற்றவர்க்கு
நல்லகுடிப்பிறந்தார்நல்கூர்ந்தாராலு
மில்லையெனமாட்டாரிசைந்து (53)

(உரை) ஆற்று பெருக்கு அற்று - ஆற்றில் வெள்ளம் வற்றி; அடிசுடும் - (மணல் சூடேறியதால்) காலைப்பொசுக்குகின்ற; அந்நாளும் - அக்காலத்தும்; அ ஆறு—; ஊற்று பெருக்கால் - ஊற்றுநீர் மிகுதியால்; உலகு ஊட்டும் - உலகத்தாரை உண்பிக்கும்; (அதுபோல) நல்ல குடிப்பிறந்தார் - உயர்ந்த குடியிற் பிறந்தவர்; நல்கூர்ந்தார் ஆனாலும் - தரித்திரர் ஆன காலத்தும்; எற்றவர்க்கு - இரந்தவர்க்கு; இசைந்து - மனதார; இல்லை என மாட்டார்—;

ஊற்று - முதல் நிலை திரிந்த தொழிற் பெயர். உலகு - இடவாகு பெயர்; இல்லை - இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான குறிப்பு முற்று; எற்றவர் - இறந்தகால வினையாலணையும் பெயர்; எல் - பகுதி, அர் - விகுதி, த் - இடைநிலை, அகரம் சாரியை; லகரத்திரிபும் வகரத்தோற்றமும் சந்தி. பெருக்கு - முதனிலை திரிந்த தொழிற் பெயர்-

நல்வழி.

ஈவாரே மேல் வகுப்பினர்.

*சாதியிரண்டொழியவேறில்லைசாற்றுங்கா
னீதிவழுவாநெறிமுறையின்—மேதினியி
லிட்டார்பெரியோரிடாதாரிழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி. (54)

(அ-ம்) வழு - தவறு, நெறி - வழி; பட்டாங்கு - மெய்நூல்.

(உரை) பட்டாங்கில் உள்ளபடி - மெய்ந்நூலில் உள்ள பிரகாரம்; சாற்றுங்கால் - சொல்லுமிடத்து; மேதினியில் - இப்பூவுலகில்; சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை—; (அவை) நீதிவழுவா - நீதி தவறாத; நெறி முறையின் - வழியின் முறையினால்; இட்டார் - வறியோர்க்குக் கொடுப்போர்; பெரியோர் - உயர்ந்த ஜாதியார்; இடாதார் - அவ்வாறு கொடாதவர்; இழிகுலத்தோர் - தாழ்ந்த ஜாதியார் என்பனவைகளே.

எக்குடிப் பிறப்பினும், எந்நிலையில் இருப்பினும் முறைப்படி ஈவோரே மேல்ஜாதியார். மற்றையோர் ஈனஜாதியரே என்பது கருத்து.

இட்டார் என்பதற்குப் பணம் கொடுத்தோர் என்றுமட்டும் பொருள் கொள்ளாமல் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றும் இட்டோர் எனப் பொருள் கொள்ளல் சிறப்பு. "நெறிமுறையின்" இடுதலாவது அகம்பாவமின்றியும் குறிப்பறிந்தும், பாத்திரமறிந்தும் இருவர் மனமும் கோணாமலும் கொடுத்தல். சாற்றுங்கால் - செயின் என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம் சாற்று - பகுதி; உம் - சாரியை. கால் - எதிர்கால வினையெச்ச விகுதி. பகுதி ஈற்று உகரக்கேடும், சாரியை ஈற்று மகரத்திரிபும் சந்தி. உம்மைகள் - உயர்வு சிறப்புப் பொருளன.

ஈயாமையே மறுபிறப்பில் வறுமைக்குக் காரணம்.

*செய்தீவினையிருக்கத்தெய்வத்தைநொந்தக்கா
லெய்தவருமோவிருநிதியம்—வையத்
தறும்பாவமென்னவறிந்தன்றிடார்க்கின்று
வெறும்பானைபொங்குமோமேல். (55)

(உரை) வையத்து - பூமியில்; பாவம் அறும் என்ன அறிந்து—; அன்று இடார்க்கு - முற்பிறப்பில் தானஞ்செய்யாதார்க்கு; செய்தீவினை இருக்க - செய்த ஈயாமையாகிய அப்பாவமே (அடைந்துள்ள வறுமைக்குக் காரணமாக) இருக்க; இன்று - இப்பொழுது; தெய்வத்தை நொந்தக்கால் - கடவுளை வெறுத்தால்; இருநிதியம் - மிக்க செல்வம்; எய்த வருமோ - அடையுமாறு கைக்கு வருமோ (வராது); வெறும் பானை—; மேல் பொங்குமோ?—அடுப்பில் வைத்து எரித்தால் மேலே பொங்குமா? (பொங்காது)

"ஈதலால் பாவம் நீங்கும். ஈயாமை மறு பிறப்பில் வறுமைக்குக் காரணமாகும். ஒருவன் தான் வறுமையுற்ற காலை, முற்பிறப்பில் தான் ஈயாக்குறையால் அஃதுற்றதெனக்கொள்க. வறுமைப்பொருட்டு தெய்வத்தை நோவதைவிட்டுத் தன்னையே நொந்துகொண்டு இனியும் அந்நிலை எய்தா வண்ணம் கூடியமட்டும் தானம் செய்து தீரவேண்டும். முன் ஏதேனும் போட்டுக் கொதிக்க வைத்த பானையில் உள்ள பொருளே மிகுந்து வெளிவரும். அதுபோல முன் செய்த தருமமே மிகுந்து பின் பயன் தரும். ஒன்றும் போடாத பானையைக் கொதிக்க வைப்பின் எதும் அதினின்றும் பெறமுடியாததுபோல் முன்பு உலோபியாக இருப்பின் பிறர் நம் பால் உலோபமே காட்டுவர்." என்ற விஷயங்களை இச்செய்யுளால் நன்கறிக. "இறந்த பிறப்பிற் றான் செய்த வினையைப், பிறந்த பிறப்பால் அறிக—பிறந்திருந்து செய்யும் வினையால் அறிக இனிப் பிறந்தெய்தும் வினையின் பயன்." என்பதாலும் இதனை உணர்க.

செய்வினை - வினைத்தொகை; தீவினை - பண்புத்தொகை. நொந்தக்கால் - செயின் என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; நொ - பகு

கால் - வினையெச்ச விகுதி; து, அ - சாரியைகள்; ந் க் - சந்தி. ஓ - எதிர்மறைப் பொருளன.

ஈவோர்க்கு யாவரும் உறவினரே.

*மரம்பழுத்தால்வெளவாலைவாவென் றுகூவி
யிரந்தழைப்பார்யாவருமங்கில்லை—சுரந்தமுதங்
கற்றாதரல்போற்கரவா தளிப்பரே
லுற்றாருலகத்தவர். (56)

மரம்பழுத்தால்—; வா என்று - (பழந்தின்ன) வா என்று; வெளவாலை—; கூவி இரந்து அழைப்பார் - இரைந்து விரும்பி அழைப்பவர்; யாவரும்—; அங்கு - அம் மரத்தடியில்; இல்லை—; கன்று ஆ - கன்றையுடைய பசு; அமுதம் சுரந்து - பாலைச் சுரந்து; தரல்போல்—; கரவாது அளிப்பரேல் - ஒளிக்காமற் கொடுப்பாராயின், உலகத்தவர்—; உற்றார் - முற்கூறிய வெளவாலைப்போல் பிறர் விரும்பி யழையாமலே) உறவினராவர்.

கன்று+ஆ=கற்றா. மென்றொடர் வன்றொடர் ஆயிற்று. "குளங் தொட்டுத் தேரை வழிச்சென்றாரில்" என்பதையும் நோக்குக.

நீதிவெண்பா.

ஈயாவிடினும், ஈவோரைத் தடுக்கும் ஈனரும் உளர்.

*தாமுங்கொடார்கொடுப்பார்தம்மையுமீயாதவகை
சேமஞ்செய்வாருஞ்சிலருண்டே—யேமநிழ
லிட்டுமலர்காய்கனிகளீந்தருளுமாமரத்தைக்
கட்டுமுடைமுள்ளெனவேகாண். (57)

(அ - ம்) சேமம் - அடக்கம், காவல்; ஏமம் - இன்பம்; மா - சிறந்த;

(உரை) ஏமம் நிழல் இட்டு - இன்பந்தரும் நிழலைத் தந்து; மலர் காய் கனிகள் ஈந்து—; உதவும் - உதவிசெய்கிற; மா மரத்தை - சிறந்த மரத்தை, கட்டும் - சூழ்ந்த; உடைமுள் என - உடைவேல் முள்ளைப்போல; தாமும் கொடார் - தாமும் வறியோர்க்கு ஏதும் ஈயாதவராய்; கொடுப்பார் தம்மையும்—; ஈயாவகை - கொடாத வண்ணம்; சேமம் செய்வாரும் - தடுத்து விடுவோரும்; சிலர் உண்டு—; காண் - அறிவாயாக. (ஏ - அசை)

"காண்." என்பதை அசையாகவும் கொள்ளலாம். மலர், காய், கனி - முதனிலைத் தொழிற் பெயர்கள். செய்வாரும் - உம், இழிவு சிறப்பு "நன் மரத்தை" என்றும் பாடம். உடை - ஒருவகை வேல்மரம்.

மூவகை உதவிகள்.

*தானறிந்தோருக்குதவிதன்னாலமையுமெனிற்
றானுவந்தீதறலையாமே—யானதனாற்
சொன்னாற்புரிதலிடைசொல்லியும்பன்னாண்மறுத்துப்
பின்னாட்புரிவதுவேபின் (58)

(உரை) தான்—; அறிந்தோருக்கு - பழகிய ஒருவருக்கு; உதவி—; தன்னால் அமையும் எனில் - (செய்வதற்குத்) தன்னால் கூடுமானால்; தான்—; உவந்து ஈதல் - (அவர் கேட்குமுன் அவ்வுதவியை) மகிழ்ந்து செய்தல்; தலை ஆம் - உத்தமம் ஆகும்; ஆனதால்—; சொன்னால் புரிதல் - அவர் கேட்டபின் செய்தல்; இடை - மத்திமம் ஆம்; சொல்லியும் - அவர்கேட்டும்; பல் நாள் மறுத்து—; பின் நாள் - அதன் பின்பு; புரிவது செய்வது; பின் - (எல்லாவற்றிற்கும்) பின்னதாகிய அதமம் ஆகும். (ஏ - அசை.)

இச் செய்யுளின் கருத்தும் 4-வது செய்யுளின் கருத்தும் ஒன்றே.

தனிப்பாடல்.

ஈகையின் இயல்பும் கொடையிற் பொய்த்தானின் குலநாசமும்.

*தண்டாமலீவதுதாளாண்மைதண்டி
யடுத்தக்காலீவதுவண்மையடுத்தடுத்துப்
பின்சென்றாலீவதுகாற்கூலிபின்சென்றும்
பொய்த்தானிவனென்றுபோமேலவன்குடி
யெச்சமிறுமேலிறு. (59)

(உரை) தண்டாமல் - தன்னை நெருங்கிக் கேட்காமலிருக்கும்போதே (குறிப்பறிந்து); ஈவதே - தருவதே; தாளாண்மை - (உத்தம) உபகாரமாகும். தண்டி அடுத்தக்கால் - தன்னை நெருங்கியடைந்தபோது; ஈவது—; வண்மை - இடைத்தரக் கொடையாகும்; அடுத்து அடுத்து - பன்முறை நெருங்கி; பின் சென்றால் - தன்னைத்தொடர்ந்து கேட்குமாறு வந்த பின்; ஈவது—; கால் கூலி - நடைச்சிரமத்தின் கூலியே ஆகும்; பின் சென்றும்—; இவன் பொய்த்தான்—; என்று போமேல் - என்று போய்விடுமானால்; அவன் குடி - ஏமாற்றியவனது குலமானது; எச்சம் இறுமேல் - சந்ததியே அற்றுப்போவது உண்மையாயின்; இறு - (கொலுசே!) நீ அறுவையாக.

இது தமிழ் நாவலர் சரிதையில் உள்ள ஓர் செய்யுள். ஔவை கூறியதாகும் இது. அவள் காலத்தில் இருந்த பாண்டியன் பல வித்வான்களின் கல்வித் திறத்தைப் பரீக்ஷிக்கக் கருதி நான்கு செம்பொற் கொலுசுகள் தொங்கும் ஊஞ்சற் பலகை யொன்றமைத்து அதன்மீது மிக்க பொற்குவை

யிட்டு "இக்கொலுசுகள் அறுந்து விழப்பாடுவோர்க்கு, ஏற்ற மரியாதையும், இப்பொற் குவியற் பரிசும் தரப்படும்," என விளம்பரம் செய்தான் என்றும், பலரும் அவ்வாறு செய்யமுடியாமல் நிற்க, ஔவை நான்கு செய்யுட்கள் பாட, அந்நான்கும் இற்று விழுந்தன வென்றும், அவற்றுள் முற்கூறிய செய்யுளும் ஒன்று என்றும், அவளது சரித்திரத்தால் தெரிகின்றது.

ஈவது - தொழிற் பெயர். து விகுதி.

திருக்குறள்.

ஏற்பது இகழ்ச்சி; ஐயம் இட்டு உண்.

நல்லாறெனினுங்கொளறீதுமேலுக
மில்லெனினுமீதலேநன்று. (60)

(உரை) கொளல் - இரந்து ஒரு பொருளைப் பெறுதல்; நல் ஆறு - (முத்தி யுறுதற்கான) சிறந்த வழி; எனினும் - என்று (ஒருவர்) சொன்னபோதிலும்; தீது - அவ்யாசகம் தீதேயாகும்; மேல் உலகம் - மோக்ஷ லோகம்; இல் எனினும் - (ஈவோர்க்கு) இல்லையென்று (ஒருவர்) சொன்ன காலத்தும்; ஈதலே - கொடுத்தலே; நன்று - நலந்தருவதாகும்.

"எனினும்" என்பது அவ்வாறு எவரும் சொல்பவர் இன்மையை உணர்த்தியதாகும்; இல் - இல்லை யென்பதன் விகாரம்; இது குறிப்புமுற்று. தீது, நன்று - இவை முறையே தீமை, நன்மை யென்னும் பண்படியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்றுக்கள். உலகம் தமிழ்ப்பதமே என்பர் நச்சினார்க்கினியர். இச் செய்யுளில் "தீது" என்றும் "நன்று" என்றும் வந்தது முரண். ஏகாரம் பிரிநிலை; தேற்றமும் ஆகும்.

ஈகையின் பயன்.

அற்றாரழிபசிதீர்த்தலஃதொருவன்
பெற்றான்பொருள்வைப்புழி. (61)

(அ - ம்) அற்றார் - (பொருள்) அற்றார்; அழி - வருத்து; தீர்த்தல் - நீக்கக்கடவன்; உழி - இடம்;

(உரை) அற்றார் - வறிஞரின்; அழி பசி (எல்லா நன்மைகளையும்) அழிக்கும் பசியை; தீர்த்தல் - (அறமே கருதி) போக்குவானாக; அஃது - அவ் வன்னதானம்; பொருள் பெற்றான் ஒருவன - செல்வமுற்ற ஒருவன்; வைப்பு உழி - (அச்செல்வம் பின் தனக்குப் பயன்படுமாறு) பத்திரப்படுத்தி வைக்கும் இடமாகும்.

வறியவர்கள் பசியைத்தீர்க்கச் செலவிடும் பொருள் மறுமையில் அவனுக்கு உதவும் என்பது கருத்து. "அழிபசி" என்பதன் உண்மையை, "மானம் குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" என்பதனால் அறிக. அழி பசி - வினைத்தொகை. தீர்த்தல் -

இது தல் விகுதி பெற்ற வியங்கோள் வினைமுற்று; "வைப்புழி" என்பது 4-ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைநிலைத்தொடர்.

ஈயா லோபிகள் ஈகை இன்பமறியார்.

ஈத்துவக்குமின்பமறியார்கொறாமுடைமை
வைத்திழக்கும்வன் கணவர். (62)

(உரை) தாம்—; உடைமை - உடைய பொருளை; வைத்து இழக்கும் - (ஈயாது) சேகரித்து வைத்து (தமக்கும் பிறர்க்கும் பயன்படாமல்) அதனை இழந்து போகின்ற; வன்கணவர் - அருளில்லாக் கொடியவர்; ஈத்து - (ஏழைகளுக்குக்) கொடுத்து; உவக்கும் - (அவர்கள் அடையும் இன்பத்தைக் கண்டு அருளுடையார்) அடையும்; இன்பம் - இன்பத்தை; அறியார் கொல் - உணர்ந்தறிய மாட்டார்களா?

ஈத்து—வவித்தல் விகாரம். வன்கண்மை - கொடுமை; அருளின்மையுமாம். அதனையுடையவர் வன்கணவர். உடைமை—மை பண்புப் பெயர் விகுதி - ஆகுபெயராய்ப் பொருளை யுணர்த்திற்று. இக்குறளால் "ஈதற்குச் செய்க பொருளை" ஈதலே இன்பம் பயக்கும். "ஈயார்தேட்டைத் தீயார் கொள்வர்" "துய்யாப்பொருளே துன்பிற் குறைவிடம்" முதலிய பலநீதிகள் விளங்கும். கொல் - வினாப்பொருளில் வந்தது. வன்கணவர்—வன்கண்மை பகுதி. அர் விகுதி. ஈறுபோதல் என்ற விதிப்படி மை கெட்டது. அ - சாரியை. உவக்கும் - காரணத்தினுல் வந்த பெயரெச்சம்.

ஈயாமையின் கொடுமை.

சாதலினின்னாததில்லையினிததூஉ
மீதலியையா[illegible]. (63)

(உரை) சாதலி[illegible] மரணத்தைக் காட்டிலும்; இன்னாதது - துன்பம் தருவது; இல்லை - (வே[illegible]ன்று) இல்லை; அதூஉம்; அம் மரணம் கூட; ஈதல் இயையாக்கடை [illegible]ல்லாதார்க்கு அவர்கட்கவசியமான பொருளைக்) கொடுக்கமுடியாதபொ[illegible] இனிது - இன்பம் தருவதாகும்.

ஈயாமை மரண வே[illegible]னையினும் கொடிது என்பது இதன் கருத்து.

சாதலின் - 'இன்' [illegible] வேற்றுமை எல்லைப்பொருள். இன்னாதது எதிர்மறைக்குறிப்பு வினை[illegible]லணையும் பெயர். இன்னு - பகுதி: த் - எழுத்துப்பேறு; அ - சாரியை [illegible] ஒன்றன்பால் விகுதி: அதூஉம் - இது 'அதுவும்' என்பதன் விகாரம் சொல்லிசையளபெடை; இயையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இன்னாதது × இனியது.

ஆகச் செய்யுள் 63. ஈகை முற்றிற்று.

நீலமாணி.

அல்லது

"வாழ்வில் தோன்றிய விபத்து"

இப் பெயருடைய உயர்ந்த நாவல் ஸ்ரீமத் R. S. நாராயணசாமி ஐயர் B. A. B. L. அவர்களால் எழுதப்பெற்றது. இதில், ஒன்றை நினைத்தின் அது ஒழிந்திட்டொன்றாகும் என்ற உண்மை, கதையின் பல சந்தர்ப்பங்களி னின்றும் நன்கு புலனாகும். இது மிகவும் வேடிக்கையாய் எழுதப் பெற்றிருக் கிறது. விலை அணா 10.

"பணம்பற்றி மணமா அல்லது குணம்பற்றி மணமா"

என்னும்

பொற்கொடி.

படிப்பவர்க்கு நற்புத்தியும் மனச்சந்தோஷமும் தரும் இவ்வருமை யான செந்தமிழ் நாவல் சில வருஷங்களுக்கு முன் நமது நாட்டுச் சீர்திருத் தத்தின் பொருட்டு, சுதேசமித்திரன் மாஜி உதவிப் பத்திராதிபரும், ஓட் பிடாரம் வக்கீலுமாகிய ஸ்ரீ G. M. சுந்தரம்பிள்ளையவர்களால் எழு[தப்] பட்டு, வெளியிடலானது. இப் புத்தகத்தின் சிறப்பை அறிந்தோர் [பல] ரிருந்தும், சில வருஷங்களாக அதன் பிரதி கிடைக்காததால் அனை[வரு]ம் அதி ஆவலுடன் இருக்கின்றனர். அதைப் பார்க்க ஆரம்பித்தால் [முடியு] முன் கீழேவைக்க மனம் வராது என்பது நிச்சயம். இப் பதிப்பு நயமா கிளேஸ் கடிதத்தில் சமயத்துக்கேற்ற சித்திரப் படங்களுடன் வெளி வந்திருக்கிறது. யாவரும் வாங்கி வாசிக்க வேண்டுமென்று இதன் விலை சொற்ப மாக ஏற்படுத்தி இருக்கிறோம். விலை அணா. 13.

மாண்டவன் மீண்ட மாயம்.

ஓர் துப்பறியும் தமிழ் நாவல். ஆடவர், பெண்டிர், பெரியோர், சிறி யோர் யாவரும் அதிக ஆவலுடன் படித்து ஆனந்திக்க அதி சுலபமான இனிய தமிழ்நடையில் எழுதப்பெற்றது. விலை அணா 12.

பாரதம் 16-ம் போர்ச் சருக்கம், மூலமும் உரையும்.

விலை அணா. 8.

இதில் கண்ட புத்தகங்கள் எம்மிடத்திலும் அடியிற் குறிப்பிட்டோரிடத்தும் பெறலாம்:—

ஸ்ரீ. மதுரைத் தமிழ்ச்சங்கம் மானேஜர், மதுரை.

பண்டிதர் ஸ்ரீ. ம. கோபால கிருஷ்ணையர், மதுரை.

ஸ்ரீ. நே. ரா. சுப்பிரமணிய சர்மா,
பசுமலை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் வெள்ளியம்பலம் மதுரை.

ஸ்ரீ. T. V. வேங்கடேசுவரையர்,
புஸ்தகவியாபாரி, ஸ்வாமிசந்நிதி, திருநெல்வேலி.

விவேகபாநுப் பிரஸ், மதுரை.

இங்ஙனம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.